GOKULAM

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

ஆகஸ்ட் 2007
விலை ரூ.8/-
80 பக்கங்கள்





60

பஃபூன் பிறந்த கதை!

மின்னும் வைர சுதந்திரம்

புதுப் பொலிவுடன் எல்லா பக்கங்களும் வண்ணத்தில்...


கோகுலம் 25

நகைச்சுவைச் சிறப்பிதழ்!

உள்ளே... சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்



1

2

3

4

5

6

7

8

9

10

11

12

13

14

15

16

17

18

19

20


21

22

23

24

25



தொடர்ச்சி 3-ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி

ஆகஸ்ட் 2007 மலர்: 25 இதழ்: 7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

நகைச்சுவைச் சிறப்பிதழ்!

உள்ளே...

- பரிசுப் போட்டி 3
- பஃபூன் பிறந்த கதை 4
- விதியின் வேகம் 8
- சிகரம் தொட்ட சிரிப்பு மன்னர்கள் .. 12
- சாதனைத் தளிர்கள் 14
- ஆபூவும் தேனீக்களும் 17
- ஓட்டு கேட்ட புலி 20
- சூப்பர் கையெழுத்து 22
- ஹா... ஹா... ஹா... 24
- அடிச்சது யாரு? 25
- ஹாஸ்யயோக! 27
- என் பெயர் தென்றல் 30
- குட்டீஸ் கோகுலம் 33
- என் வீட்டுச் செல்லக்குட்டி 49
- டாம் & ஜெர்ரி 52
- கவிதைப் பூங்கா 54
- சிரிப்பலை 56
- உங்கள் கைவண்ணம் 58
- ஏலேலோ எவரெஸ்ட் 60
- வரம் வாங்கிய குறும்பை! 62
- கோகுலம் சிறுவர் சங்கம் 65
- மின்னும் வைர சுதந்திரம் 68
- கடவுள் வந்தார் 71
- நண்பர்கள் தினம் 74
- அதிசயங்களே... 76
- டைனோஸரைச் சந்திப்பேன் 78
- தேன்மொழி - கனிமொழி 80





கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி
உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : **25 யுஎஸ். டாலர்**

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...



ஆஹா!

இந்த இதழைக் கையில் வாங்கியதும் உங்கள் கண்கள் விரிந்திருக்கும். பக்கங்களைப் புரட்டிப் புரட்டி பரவசமடைந்து, 'ஆஹா' என்று சொல்லியிருப்பீர்களே?

ஆம்! உங்கள் உள்ளம் கவர்ந்த கோகுலம் இனி எல்லா பக்கங்களும் வண்ணத்தில் வெளிவரும். இன்னும் சிறப்பான வடிவமைப்புடன், அழகழகான படங்களுடன், கூடுதல் கவனத்துடன் கொடுக்கப் போகிறோம். கோகுலத்தின் விலையுடன் வண்ணங்களுக்காகும் செலவுகளை ஒப்பிடுகையில் இது கூடுதல் சுமை மட்டுமின்றி இழப்பும்கூட! ஆயினும் இந்தச் சுமையைச் சுகமாக நினைக்கிறோம். எல்லாம் உங்களை மகிழ்விக்கத்தான்.

அது மட்டுமா? இந்த இதழ் நகைச்சுவைச் சிறப்பிதழாக, உங்களை வயிறு குலுங்க வைக்கப் போகிறது. அடுத்த இதழ் 'அறிவியல் சிறப்பிதழாக' உங்களை ஆச்சர்யத்தில் திளைக்க வைக்கப் போகிறது. அடுத்தடுத்த இதழ்களும் வெவ்வேறு சிறப்பிதழ்களாக வெளிவரும்.

படித்து மகிழுங்கள்; உங்கள் கருத்துகளை தவறாமல் எழுதுங்கள். **உங்கள் நண்பர்களுக்கும் கோகுலத்தை அறிமுகப்படுத்துங்கள்.** ஒவ்வொருவரையும் **வாங்கிப்** படிக்கச் சொல்லுங்கள்.

அன்புடன்
கோகு

போட்டி

பரிசு ரூபாய் 1000/-



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. **முடிவு தேதி 16.8.2007**

அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
7-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
கக்காடுதாங்கல்,
சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் - 2


கேள்விகள் :

1. சீன மன்னரைக் காப்பாற்றிய கோமாளியின் பெயர் என்ன? ____________
2. முதுகுத்தண்டு வலியால் அவதிப்பட்ட நார்மன் கொசின் என்ன செய்தார்?
____
3. ஆனந்தியின் தாய் பெயர் என்ன? ____________
4. எவரெஸ்ட் மலையின் உயரம் எவ்வளவு? ____________
5. லாரல்-ஹார்டி இணைந்து நடித்த படங்கள் எத்தனை? ____________

பெயர் : ....
வகுப்பு, பள்ளி : ....
: ....
வீட்டு முகவரி : ....
....
....

கவர் ஸ்டோரி

பஃபூன்



ஹாய் குட்டீஸ்! நீங்க எல்லாம் சர்க்கஸ் பார்த்திருக்கீங்களா? அதுல வீரசாகஸ விளையாட்டுகளை சர்க்கஸ் வீரர்கள் செய்துட்டு இருக்கறப்ப இடையில குள்ளமாவும், விசித்திரமான உருவத்திலும் ஒன்றிரண்டு பேர் புகுந்து கலாட்டா செய்வாங்க. வீரர்களை மாதிரியே சாகஸம் செய்ய 'ட்ரை' பண்ணி ஏடாகூடமா செய்துடுவாங்க. இவங்களை ஆங்கிலத்துல 'கிளவுன்'னு சொல்வாங்க. பஃபூன்னும் ஒரு பெயர் இருக்கு. தமிழ்ல கோமாளின்னு சொல்றதுண்டு.

பிறந்த கதை!

சர்க்கஸ் சாகஸக் கலைஞர்கள் உயரத்துல, ஊஞ்சலில் தாவறதும் அங்கிருந்து கீழே கட்டியிருக்கிற வலையில குதிக்கறதும் பார்க்கவே மயிர் கூச்செறிய வைக்கும். அப்போ இடையில இவங்க வந்து, குதிக்கறதுக்கு பயப்படற மாதிரியும் அப்படியே குதிச்சாலும் எக்குத் தப்பா குதிச்சு, குட்டிக் கரணம் போடறதும் பார்க்கவே சிரிப்பா இருக்கும். இந்த மாதிரி செய்யறதால இவங்க முட்டாள்களோ, ஒண்ணும் தெரியாதவங்களோ கிடையாது. மத்த வீரர்களை மாதிரியே இவங்களும் சாகஸங்களை முறையா கத்துக்கிட்டவங்கதான். மக்களைச் சிரிக்க வைக்கற நோக்கத்துல இப்படிச் செய்யறாங்க.

பொதுவா சர்க்கஸ் கோமாளிகளை மேக்கப் அடிப்படையில 'கிளவுன் ஒயிட்', 'அகஸ்டோன்'னு ரெண்டு வகையா பிரிக்கறாங்க. முகம் முழுக்க வெள்ளை நிறத்தைப் பூசிட்டு இருக்கறவங்களை 'கிளவுன் ஒயிட்' அப்படின்னு சொல்வாங்க. இவங்க காதுகளுக்குச் சிவப்பு வண்ணமும், தலையில கூர்மையான குல்லாயும் இருக்கும். இவங்க உடல்ரீதியான சேட்டையில தேர்ந்தவங்க.

அடுத்து அகஸ்டோ கோமாளிகள்! பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில அறிமுகமான இவங்க தலையில விசித்திரமான வண்ண செயற்கை தலைமுடியை (விக்) வெச்சுட்டிருப்பாங்க. பருத்த உடலோடு இருப்பாங்க. உடம்புக்கு கொஞ்சமும் பொருந்தாத பெரிய சைஸ் டிரெஸ், கால்களில் பெரிய ஷூக்கள் போட்டிருப்பாங்க. உடல் சேட்டைகளோடு நகைச்சுவையா பேசறதுலயும் தேர்ந்தவங்க.

கோமாளிகளோட வரலாறு ரொம்பவும் தொன்மையானது. கிறிஸ்து பிறக்கறதுக்கு பல நூற்றாண்டுகளுக்கு







கௌதம் ராம்



முன்னாடி, சீனாவில் மன்னர்களின் சபையில் கோமாளிகள் இருந்ததா வரலாற்று குறிப்பிருக்கு. யூசு என்ற சீனக் கோமாளி தன்னோட புத்திசாலித்தனத்தால அரசரின் உயிரையே காப்பாத்தி இருக்கறதா சீன மக்களிடையே இன்றும் பிரபலமா பேசப்படுது. குழந்தைகளுக்கு கதையா சொல்லப்படுது.

எகிப்திய அரண்மனையில் குள்ளமான மனிதர்கள் மன்னர்களையும் சபையில் உள்ளவர்களையும் சந்தோஷப்படுத்த நிகழ்ச்சிகள் நடத்தியிருக்காங்களாம். அமெரிக்க பழங்குடியினரின் மதம் சம்பந்தமான சடங்குகளில் கோமாளிகள் பங்கு பெறுவாங்களாம். சடங்குகள் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி, வந்திருப்பவர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பாங்களாம். அந்த இன மக்கள் தங்களோட குழந்தைகளுக்குத் தங்களின் பாரம்பரிய சடங்குகள் பற்றிச் சொல்லிக் கொடுக்கற பொறுப்பையும் கோமாளிகளிடம் ஒப்படைச்சு இருக்காங்களாம்.



நம் நாட்டின் பாரம்பரிய கலைகளில் ஒண்ணு தெருக்கூத்து. இப்பவும் ஒரு சில கிராமங்களில் தெருக்கூத்து நடந்துட்டு இருக்கு. அதுலகூட 'கோமாளி' வருவார். பல சமயங்கள்ல அவரே 'கட்டியக்காரனாக'வும் இருப்பார். தெருக்கூத்து புராண, இதிகாச, இலக்கிய கதைகளாக இருந்தாலும் அதில் வருகிற 'கட்டியக்காரன்' கேரக்டர் தற்கால விஷயங்களையும் பேசுவார். சமூகத்துல நடக்கிற தவறுகளை



மறைமுகமாச் சுட்டிக் காட்டுவார். அரசாங்கத்தின் செயல்பாடுகளைக் கிண்டலடிப்பார். சிரிக்க வைக்கறதோட சிந்திக்கவும் வைப்பார். சீரியஸா போய்ட்டிருக்கிற கதைக்கு நடுவுல கோமாளி வர்றது கொஞ்சம் ஜாலியா இருக்கும்.

கிருஷ்ண தேவராயர் அரண்மனையில் விகடகவியா இருந்த தெனாலிராமன் கதைகளை நீங்க நிறைய படிச்சிருப்பீங்க. மேலோட்டமா பார்த்தா தெனாலிராமனின் செயல்பாடுகள் முட்டாள்தனமா தோணும். முல்லா நஸ்ருதீன் கதைகளும் அப்படித்தான். ஆனா ஊன்றி கவனிச்சா ஒரு உண்மை புரியும்; அது என்னன்னா, சமுதாயத்துல இருக்கிற முட்டாள்தனம், மக்களின் அறியாமையை போக்கத்தான் அவங்க அப்படி நடந்துக்கறாங்க.

உலகம் முழுக்க ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் இப்படிப்பட்ட கேரக்டர்கள் உண்டு. பஃபூன் என்கிற இந்த கோமாளிகள் ஒரு பெரிய தத்துவத்தையும் நமக்குச் சொல்றாங்க. அது என்ன தெரியுமா? தனிப்பட்ட முறையில் அவங்க வாழ்க்கையில பல சோகங்கள் இருக்கும். ஆனாலும் அதை வெளிக்காட்டிக்காம மத்தவங்களைச் சந்தோஷப்படுத்தறாங்க.



இதுகூட ஒரு தியாகம்தான். அந்த அளவுக்கு இல்லைன்னாலும் நாம ஓரளவுக்காவது மத்தவங்களைச் சந்தோஷப்படுத்தணும். வாய்ப்பு கிடைக்கறப்ப நாமும் சந்தோஷமா இருந்து, மத்தவங்களையும் சந்தோஷப்படுத்துவோம். ☺

கடித மாலை

இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் டாக்டர் அப்துல் கலாம் குறித்த 'கவர் ஸ்டோரி' பொருத்தமான நேரத்தில் வெளியிடப் பட்ட அருமையான கட்டுரை. அவரது கனவை நனவாக்குவோம்.

- வெ.கல்யாணி, திருநெல்வேலி

ஒவ்வொரு மாதமும் கோகுலம் வாங்கியவுடன் அனைத்து பகுதிகளையும் படித்து மகிழ்வதுடன், எனது பள்ளித் தோழிகளிடமும் காண்பித்து இது போன்ற புத்தகங்களை வாங்கிப் படித்துப் பயன்பெற அறிவுறுத்தி வருகின்றேன்.

- டி.எம்.சிவரஞ்சனி, திருவைகாவூர்

நம்பிக்கை நட்சத்திரம்!

புதிய பகுதியான 'அறிவுப் பூங்கா'வில், 'ஆல்ப்ஸ் மலைத் தொடர்' பற்றிய தகவல்களை ஆசுரா அவர்கள் விவரித்த விதம், நேரில் கண்டு ரசித்ததைப் போன்றதொரு பிரமிப்பை ஏற்படுத்தியது.

- வி.வேல்முருகன், சேலம்

தெரிந்த தலைவர் தெரியாத தகவல் மூலம் மதன் மோகன் மாளவியா பற்றி அறிந்து கொண்டோம். தும்பியும் வான வில்லும், கதைப்பாடல் மிக நன்றாக இருந்தது.

- வை.சுப்ரணியன், சேலம்

ஆலமரம், அழகு பிள்ளையார், சீருடை என்று மூன்று கவிதைகளுமே கவிதைப் பூங்காவில் முத்துக்களாக ஜொலித்தன. திரும்பத் திரும்ப விரும்பி விரும்பிப் பாடித் திளைத்தோம்.

- ஆர்.பி.வளர்மதி, நெல்லை



சிறுகதை

விதியின் வேகம்!

மு. நடராசன்

அரியநகர் தேரடி வீதியில் இருந்த அந்த வீடு குதூகலத்தில் மிதந்து கொண்டிருந்தது. நாளை காலையில் புறப்பட இருக்கும் சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் வீட்டின் பெரியவர்கள் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்க, சுற்றுலாவில் பார்க்க இருக்கும் இடங்கள் குறித்து படித்து தெரிந்துகொண்டதையும், கற்பனையில் தோன்றியதையும் வைத்து சுவாரசியமாய் ஆனந்தியும், ஜீவாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுற்றுலாவில் பங்கேற்பதற்காக கிராமத்திலிருந்து அத்தை குடும்பத்தினருடன் வந்துச் சேர்ந்தார்கள்.

அடுத்த சில நொடிகளிலேயே ஆனந்தியும் ஜீவாவும் அத்தை பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தங்களது அறைக்குச் செல்ல, அங்கு ஏற்கெனவே இருந்த சித்தப்பா பிள்ளைகளான பூங்குழலியும் முத்தரசனும் ஓடி வந்து அவர்களை அணைத்துக் கொண்டனர்.

''ஜீவா உனக்குத்தான் இந்த சுற்றுலாவைப் பற்றி முழுசாய்த் தெரியுமாமே. பேருந்து காலையில் எத்தனை மணிக்குப் புறப்படுது?'' ஆர்வத்தோடு கேட்டான் ராஜீவ்.

''சரியாக அதிகாலை நான்கு மணிக்கு நமது விநாயகர் கோவிலிலிருந்து பேருந்து புறப்படும்.''

''டேய் முத்தரசா தூங்கிடப் போறே. பிறகு பேருந்தில் சன்னல் ஓர இருக்கை கிடைக்காமல் போயிடும்'' அவர்கள் கும்பலில் சிறியவனான முத்தரசனைக் கேலி செய்தனர்.

''என்ன இங்கே ஒரே கலாட்டா? அங்கே எவ்வளவு வேலை இருக்கு. ஆளாளுக்குக் கொஞ்சம் வந்து உதவி செய்யாம வீணாக அரட்டையடிச்சுக்கிட்டிருக்கீங்க?'' கேள்வி கேட்டபடியே உள்ளே வந்தாள் ஜீவாவின் அக்கா வளர்மதி.

''அக்கா... நாம் எங்கெங்கே போகப் போறோம். என்னென்னவெல்லாம் பார்க்கப் போறோம்னு கொஞ்சம் சொல்லுங்கக்கா'' சிறுவர் பட்டாளம் வளர்மதியைச் சூழ்ந்தது.

வளர்மதி தனக்குத் தெரிந்தவரை உற்சாகத்துடன் சொன்னாள்.

நேரம் நகர்ந்தது. சுற்றுலாவுக்குத் தேவையான துணிமணிகளையும் பிற பொருட்களையும் கவனமாய் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் வளர்மதியின் தாய்.

செலவுக்குத் தேவையான பணத்தை அம்மாவிடம் கொடுத்து பாதுகாப்பாய் வைத்துக் கொள்ளுமாறு சொல்லிக் கொண்டிருந்தார் அப்பா.

‘‘இது நாமாக வலிய தேடிக்கொண்ட
விபத்து. விதிமுறைகட்குக் கட்டுப்பட்டு
நடந்திருந்தால் இந்த விபத்து
நடந்திருக்காது.’’



தாத்தா பாட்டிக்குத் தேவையான மாத்திரைகளைத் தனித்தனி உறைகளில் எடுத்து வைத்துச் சரிபார்த்துக் கொண்டிருந்த வளர்மதி, தாத்தாவுக்கான மாத்திரைகள் சில குறைவதைக் கண்டாள்.

"அம்மா தாத்தாவுக்கு மாத்திரைகள் வாங்கி வரணும்னு சொன்னீங்களே மறந்துட்டீங்களா?" எனக் கேட்க, வேலைப் பளுவில் அதனைச் சுத்தமாய் மறந்து விட்டதாய்த் தெரிவித்த அம்மா, ஜீவாவை அழைத்து பணத்தையும் மருந்துச் சீட்டையும் கொடுத்து, கடைத் தெருவுக்குச் சென்று வாங்கி வருமாறு கூறினாள்.

"மணி எட்டுதான் ஆகிறது. பொறுமையாய்ச் சென்றுவா" என்று வளர்மதி சொல்ல, தனது மிதிவண்டியை எடுத்துக் கொண்டு மருந்து வாங்கிவரச் சென்றான் ஜீவா.

"என்ன ஜீவா சுற்றுலா போறீங்களாமே?" வழியில் சந்தித்த பள்ளித் தோழன் கேட்க, தாங்கள் செல்ல இருக்கும் சுற்றுலாவைப் பற்றி ஆர்வத்தோடு விவரித்தான் ஜீவா.

ஜீவாவின் பள்ளித் தோழன் பெங்களூரில் உள்ள உறவினர் வீட்டுக்கு அடிக்கடி சென்று வருபவனாகையால் பெங்களூர் மற்றும் மைசூர் ஆகிய இடங்களில் பார்க்க வேண்டியவை குறித்து கூறினான். அந்தத் தகவல்கள் அனைத்தையும் ஆர்வத்தோடு கேட்டு மனத்தில் பதிய வைத்துக் கொண்டான் ஜீவா.

"சரி, நேரமாயிட்டுது. எங்க தாத்தாவுக்கு மருந்து வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும். சுற்றுலா சென்று வந்த பிறகு உன்னைச் சந்திக்கிறேன்" நண்பனிடம் விடை பெற்றுக் கொண்டு மிதிவண்டியில் மருந்து கடை நோக்கி வேகமாய்ச் சென்றான் ஜீவா.

நேரு வீதியும் அண்ணா சாலையும் சந்திக்கும் இடத்தை நெருங்கியபோது, மஞ்சள் விளக்கு சிக்னல் போஸ்ட்டில் எரிந்து கொண்டிருக்க, கடந்து விடலாம் என்ற தவறான உந்துதலில் வேகமாய் ஜீவா மிதிவண்டியை மிதித்தான். கண் இமைக்கும் நேரத்தில் பக்கவாட்டில் வந்த ஒரு 'பைக்' அவன் மீது மோத, மிதிவண்டியோடு இடப்புறம் விழுந்த ஜீவாவால் எழுந்திருக்க இயலவில்லை. முழங்கையில் வலி!

விரைவாக அங்கு வந்த போக்குவரத்து காவலர் ஜீவாவைத் தூக்கி நிறுத்தினார். இடது கை துவண்டு ஆடியது. கை உடைந்துவிட்டது என்பது உறுதிப்பட, உடனே ஒரு ஆட்டோவில் அவனை ஏற்றி, பொது

சுழல் கோப்பை!

கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் ஐந்து மாதங்கள்தான் உள்ளன. விரைந்து அனுப்புங்கள்! கோப்பையை வெல்லுங்கள்!!



''இந்த மாத்திரை மிட்டாய் மாதிரி...''

''அப்போ மிட்டாய் குடும்மா. அதை மாத்திரை மாதிரி நெனச்சு நான் சாப்பிட்டுக்கறேன்.''

- ஆர்.தங்கராஜ், திருப்பூர்



மாத்திரையும் மிட்டாயும்!



மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

தகவல் கிடைத்த சிறிது நேரத்தில் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தனர் ஜீவாவின் பெற்றோரும் உறவினரும். அனைவர் முகத்திலும் சோகம். ஜீவாவின் அம்மா கண்ணீர்விட்டு அழுது கொண்டிருந்தார்.

''ஆபத்து எதுவும் இல்லை. பயப்படாதீங்க. கை எலும்புதான் உடைந்திருக்கிறது. சிறு பிள்ளையாக இருப்பதால் சீக்கிரமே கூடிவிடும். சிக்னல்ல கொஞ்சம் கவனத்தோடும் நிதானத்தோடும் வந்திருந்தா இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம்'' என்று கூறிவிட்டு வெளியேறினார் மருத்துவர்.

கையில் பெரிய மாவுக்கட்டோடு கட்டிலில் படுத்திருந்தான் ஜீவா. ''இப்போ வலி எப்படி இருக்கு ஜீவா?'' கண்களைத் துடைத்தபடியே விசாரித்த தாயைப் பார்த்து, ''இப்போ வலி ரொம்ப குறைஞ்சுட்டுதும்மா'' என்றான் ஜீவா.

''இது நாமாக வலிய தேடிக் கொண்ட விபத்து. விதிமுறைகட்கு கட்டுப்பட்டு நடந்திருந்தால் இந்த விபத்தே நடந்திருக்காது. ஒரு சின்ன கவனக் குறைவு, மனத்தில் ஒரு அசாத்திய துணிச்சல், போக்குவரத்து விதிமுறை மீறல், எவ்வளவு பேரைப் பாதித்திருக்கிறது? எவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது?'' முணுமுணுத்தார் ஜீவாவின் அப்பா.

ஜீவாவின் முகம் வாடியது. அனைவரின் மனத்திலும் சுற்றுலா ஏற்படுத்தியிருந்த குதூகலம், ஒரு நிமிட அவசரத்தில் பறிபோய்விட்டது. ஆனந்தி, ராஜீவ், கலையரசி, பூங்குழலி அனைவரின் மகிழ்ச்சியையும் ஒரு சின்ன கவனக்குறைவால் அழித்துவிட்டோமே என நினைக்கையில் கண்களிலிருந்து நீர் வழிந்து உருண்டது.

''எதை நினைத்தும் வருந்தாதே ஜீவா, அடுத்த ஆண்டு விடுமுறையில் நாம் அனைவரும் நிச்சயம் இதே இடங்களுக்குச் சுற்றுலா செல்லலாம்.'' அவனது கண்களைத் துடைத்துவிட்டபடியே ஆறுதல் கூறினார் ஜீவாவின் மாமா.

ஜீவாவின் மன உறுத்தல் சிறிது சிறிதாக மறைய, உதட்டில் புன்னகை பூத்தது. ☺



சிகரம் தொட்ட

லாரல் - ஹார்டி

✸ ஒல்லியான ஸ்டான் லாரல் பிரிட்டனில் பிறந்தவர். குண்டு ஆலிவர் ஹார்டி அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியாவைச் சேர்ந்தவர்.

✸ 1919ல் 'லக்கி டாக்' என்ற திரைப் படத்தில் இணைந்து



தோன்றினார்கள். ஆனால் அதற்குப் பிறகு பல படங்களில் தனித்தனியாக நடித்தார்கள். 1927லிருந்துதான் தொடர்ந்து இணைந்து நடித்தனர். இருவருமாக சேர்ந்த நடித்த படங்கள் 106.

✸ ஹார்டி ராணுவத்தில் சேரும்படி நேர்ந்தது. சில வருடங்களுக்குப் பிறகு ஹாலிவுட்டில் கால் பதித்தார்.

✸ லாரல் - ஹார்டி உலகப்புகழ் பெற்றதற்கு இன்னொரு காரணம் பல மொழிகளில் நடித்தனர். அல்பேனியன், அராபிக், பிரெஞ்ச், ஜெர்மன், கொரியன், போர்ச்சுக்கீசிய, ஸ்பானிய மொழிப் படங்களும் அதில் உண்டு.

சார்லி சாப்ளின்

✸ சார்லி சாப்ளின் லண்டனில் பிறந்தவர். இவரது இயற்பெயர் ஸ்பென்சர் சாப்ளின். இவரது தந்தை ஒரு சிறந்த பாடகர்-நடிகர்.

✸ சார்லி சாப்ளினின் இளம் வயதிலேயே அவர் தந்தை இறந்துவிட, தாயும் நோய்வாய்ப்பட, சார்லி சாப்ளினும் அவரது தம்பி சிட்னியும் சம்பாதிக்க வேணடிய கட்டாயம்.

✸ 1975ல் சார்லி சாப்ளினுக்கு 'சர்' பட்டம் வழங்கப்பட்டது.

✸ பலரும் சார்லி சாப்ளினுக்கு பழுப்புக் கண்கள் என்றே நினைத்திருக்கிறார்கள். உண்மையில் அவருக்கு நீலக் கண்கள்!

✸ மிகச் சிறந்த இசைக் கலைஞர். தனது மௌனப் படங்கள் பெரும்பாலானவற்றுக்கு, சார்லி சாப்ளினே இசை அமைத்திருக்கிறார்.

✸ சின்ன வயதில் பல வாரங்







✸ நகைச்சுவையுடன் சமுதாய சீர்திருத்த கருத்துக்களையும் திரைப்படம் மூலமாக மக்களிடையே பரப்பி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். காந்தியையும் அவரது கொள்கை

சிரிப்பு மன்னர்கள்!



கள் உடல் நலமின்றிப் படுக்கையில் இருக்க வேண்டிய கட்டாயம் சார்லி சாப்ளினுக்கு ஏற்பட்டது. அப்போது அவரது அம்மா அந்த அறை ஜன்னலுக்கருகே உட்கார்ந்து கொண்டு தெருவில் நடக்கும் காட்சிகளை வேடிக்கையாகச் சொல்வாராம். அதுதான் அவரது நகைச் சுவை உணர்வுக்கு உரமிட்டது.

என்.எஸ்.கிருஷ்ணன்

✸ நாகர்கோவிலிலுள்ள ஒழுகியஞ்சேரி என்ற இடத்தில் பிறந்தவர். நாகர்கோவில் சுடலைமுத்து கிருஷ்ணன் என்ற பெயரின் சுருக்கமே என்.எஸ்.கே. திரையுலகமும் மக்களும் 'கலைவாணர்' என்று அன்புடன் அழைத்தனர்.

✸ என்.எஸ்.கிருஷ்ணன் நகைச்சுவை நடிகர் மட்டுமல்ல சிறந்த பின்னணிப் பாடகர், எழுத்தாளர். தாம் நடித்த படங்கள் பெரும்பாலானவற்றில் நகைச்சுவைப் பகுதிக்கு அவரே வசனம் எழுதுவார்.

களையும் பெரிதும் மதித்தார்.

✸ வில்லுப்பாட்டு கலைஞராக தமது வாழ்க்கையைத் தொடங்கி, நாடகங்களில் நடித்து, திரைப்படத்தில் நுழைந்து நூற்று ஐம்பது படங்களில் நடித்தார்.

இவரது மனைவி டி.ஏ.மதுரம் இவரோடு நகைச்சுவை காட்சிகளில் இணைந்து நடித்தார். இந்த ஜோடியைப் பார்த்தாலே ரசிகர்களின் முகம் மலர்ந்துவிடும். ☺

ஜி.எஸ்.எஸ்.





பேச்சு நாயகி!

திசையன்விளை 'டேனியல் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி'யில் ஏழாம் வகுப்பு படிப்பவர் ஈஸ்வரி. பல்வேறு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுள்ளார். கடந்த ஆண்டு ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய பேச்சுப் போட்டியில் 'முயற்சி திருவினையாக்கும்' என்ற தலைப்பில் சிறப்பாகப் பேசி, பரிசும் சான்றிதழும் பெற்றுள்ளார். கோகுலம் சார்பாக அவரை வாழ்த்துவோம்!


திருக்குறள் விழா 2006 மாணவர் பேச்சுப் போட்டி
சான்றிதழ்



தங்க அரசி!





பாண்டிச்சேரி 'செயின்ட் பெட்ரிக் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி'யில் மூன்றாம் வகுப்பு படிப்பவர் ஸ்ரீநிதி. கடந்த ஆண்டு நடைபெற்ற *Velammal's Third State Level Science Talent Search Exam*'-ல் பங்கேற்று, மாநில அளவில் வென்று, தங்க நாணயம் பரிசாகப் பெற்றுள்ளார். கோகுலம் மற்றும் பல்வேறு புத்தகங்களில் வெளிவரும் பொது அறிவுப் பகுதியைத் தொடர்ந்து படித்ததால்தான் போட்டியில் சிரமமின்றி பதிலளிக்க முடிந்ததாம். ஸ்ரீநிதிக்கு தங்கமான வாழ்த்துகளைத் தெரிவிப்போம்!



பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால் அதுகுறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!



அனுப்ப வேண்டிய முகவரி :
கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.



பரிசு நாயகன்!

பட்டிவீரன்பட்டி 'நா.சு.வி.வி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி'யில் ஏழாம் வகுப்பு படிப்பவர் விவேக். கோகுலத்தில் அவ்வப்போது இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. வத்தலக்குண்டு லயன்ஸ் கிளப் கடந்த ஆண்டு நடத்திய குழந்தைகள் தின விழாவின் பேச்சுப் போட்டியில் பங்கேற்று இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். இந்தப் பரிசு நாயகனுக்கு நமது வாழ்த்துகள்!




LIONS CLUBS INTERNATIONAL

அடுத்த இதழ்...

செப்டெம்பர் 2007





அறிவியல் சிறப்பிதழ்!



விந்தையான உயிரினங்கள்,
வினோதமான கண்டுபிடிப்புகள்,
அறிவியல் முன்னோடிகள்,
சாதனையாளர்களின் கதைகள்...

பக்கத்துக்குப் பக்கம் அறிவியல் துணுக்குகள்...
பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாக வருகிறது!

டோண்ட் மிஸ் இட் குட்டீஸ்!

நாடோடிக் கதைகள்

தைவான் நாட்டுக் கதை

ஆபூவும் தேனீக்களும்!

சித்ரா சிவகுமார்

தைவான் நாட்டில், ஒரு சமயம், ஆபூ என்ற விவசாயி வாழ்ந்து வந்தார். அவர் அன்பும் பண்பும் மிக்கவர். அவரது இரக்க குணம் ஊர் அறிந்த விஷயம். ஒருமுறை ஆபூ ஒரு ஜோதிடரிடம் சென்றார். வயதான அந்தப் பெண்மணியிடம் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிக் கேட்டார்.



ஜோதிடப் பெண்மணி, ஆபூவின் கைரேகையை ஆராய்ந்துவிட்டு, ''உன்னுடைய ஆயுள்ரேகை மிகவும் பலவீனமாயுள்ளது. காலை வரை உயிர் வாழ்வது என்பது கடினமே'' என்று கூறினார்.

இதைக் கேட்ட ஆபூ, அப்படியே ஸ்தம்பித்துப் போனார். ஊர் திரும்பும் வழியில், 'நான் யாரையும் வருத்தியது கிடையாது. எனக்கு ஏன் இந்த நிலை?' என்று எண்ணிய வண்ணம் நடந்து வந்தார். தான் இறக்கப் போவதை எண்ணி வருத்தமுற்று, தன் ஆதங்கத்தைச் சத்தமான அழுகையில் வெளிப்படுத்தினார். பிறகு, சற்றே சுதாரித்துக் கொண்டு, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று பார்த்தார்.

அப்போது ஆபூவின் கண்களுக்கு, ஒரு

சிறுவன் கைகளில் விளக்குடன் நிற்பது தெரிந்தது. மூன்று சிறுவர்கள் அவனைச் சுற்றி நின்றிருந்தனர். நால்வரும் ஒரே திசை யில் எதையோ பார்த்த வண்ணம் இருந் தனர்.

ஆபூ ஆர்வத்துடன் அவர்களின் முன் வந்து, "சிறுவர்களே! ஏன் நீங்கள் விளக்கை வைத்துக் கொண்டு நிற்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

உடனே சிறுவர்கள், "நேராக அங்கே பாருங்கள். ஒரு தேன் கூடு இருக்கிறது. அதை எரிக்க முயற்சிக்கிறோம்'' என்றனர்.

இதைக் கேட்டதும், ஆபூ, மிகவும் அமைதியுடன், "தயவு செய்து ஒன்றும் அறியாத அந்தத் தேனீக்களை வருத்தாதீர் கள். எனக்கும் உங்களுக்கும் எப்படி உல கில் வாழ உரிமை இருக்கிறதோ, அதே போல அவற்றிற்கும் வாழ உரிமை இருக் கிறது. அந்த தேன் கூட்டை எரிக்காமல் இருந்தால், உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் ஐந்து காசுகள் கொடுக்கிறேன்'' என்றார்.

"அப்படியென்றால் சரி" என்று ஒரு சிறுவன் கூறினான்.

"இந்தாருங்கள் இந்த இடத்திலிருந்து சென்று விடுங்கள்'' என்று கூறி, காசுகளைத் தந்தார். சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் காசு களைப் பெற்றுக் கொண்டு சென்றனர்.

வீடு திரும்பிய ஆபூ எதையும் செய்ய விரும்பாமல், ஓய்வு எடுக்கப் படுத்தார். ஜோதிடரின் வார்த்தைகள்தான் அவர் மனத்தில் தோன்றின. உடனே உறங்குவது நல்லதல்ல என்று முடிவு செய்து கொண் டார்.

'எனக்கு இந்த பூமியில் வாழ இன்னும் சில மணி நேரங்களே இருக்கின்றன. அந்த நேரத்தை, ஏன் நான் எனக்குப் பிடித்ததைச் செய்துக் கழிக்க கூடாது. நான் நல்ல





வெந்நீரில் குளியல் போட்டு ஓய்வெடுக்கிறேன்' என்று முடிவு செய்து கொண்டு குளியலறைக் குச் சென்றார்.

ஆபூ பெரிய பானையில் நீரை எடுத்து, அடுப்பில் வைத்து, காய்ச்சுவதற்காக நெருப்பை மூட்டினார். நீர் சூடானதும், ஒரு வாளித் தண்ணீரை எடுத்துக் கொண்டு குளியலறைக்குச் சென்று, தொட்டியை நிரப்பினார். குளிக்கத் தயாரானபோது, அவரை எச்சரிக்கைச் செய்யும் விதமாக ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது. அது 'பத்திரம் ஆபூ' என்று கூறுவது போல் இருந்தது.

ஆபூ ஆச்சரியப்படும் வகையில், ஏதோ ஒரு உந்து சக்தி, அந்த அரை இருட்டில் கையிலிருந்த வாளியை கீழே விழ வைத்து, சூடான நீரைத் தரையில் கொட்ட வைத்தது.

அந்தச் சமயத்தில், ஆபூவின் மனைவி, வாளி உருளும் சத்தத்தைக் கேட்டு, விளக்குடன் வேகமாக ஓடி வந்தார். விளக்கின் ஒளியில், ஆபூவும் அவரது மனைவியும் வாளியின் அடியில் ஒரு பாம்பு உயிரற்று கிடப்பதைக் கண்டனர். ஒரு தேனீக் கூட்டம் அதன் அருகே இருந்து, ஜன்னலை நோக்கிப் பறந்து செல்வதைக் கண்டனர்.

ஆபூ பாம்புக் கடியிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார். ஒரு நொடி யோசித்தார். தான் சிறுவர்களிடமிருந்து காப்பாற்றிய தேனீக்கள்தான் தன்னைக் காப்பாற்றியிருக்கின்றன என்பதை உணர்ந்தார். ஆபூவின் இரக்க குணமும், அவரது புதிய தேனீ நண்பர்களும்தான் ஜோதிடர் குறித்த விதியை மாற்றி அமைக்க உதவின. மரணத்தை வென்றார் ஆபூ.

இரக்க குணம் கொண்ட ஆபூ, நீண்ட காலம் வாழ்ந்தார். ☺

ராஜாவின் பாடம்!

ஒரு மகாராஜா தன் மகனுக்கு சிலந்திப் பூச்சி வலையைப் பின்னிக் கொண்டிருப்பதைக் காட்டி ''சிலந்தி என்ன செய்யுது'' என்று கேட்டார்.

''வீடு கட்டுது!'' என்றான் இளவரசன்.

ஒரு பூச்சியை சிலந்தி தின்று கொண்டிருந்தது.

''சிலந்தி இப்ப என்ன பண்ணுது...?''

''சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது தந்தையே...!''

அசைவில்லாமல் சிலந்தி வலையில் இருக்க ''இப்போ என்ன செய்யுது குமாரா?''

''தூங்கிட்டு இருக்கு தந்தையே..!''

அவர் ஒரு குச்சியை எடுத்து, சிலந்தியை இலேசாகத் தட்ட... அது வலையிலிருந்து ஓட ஆரம்பித்தது. சிலந்தி ஓடுவதைக் காட்டி மகாராஜா கேட்டார்.

''இப்ப என்ன செய்யுது?''

''புறமுதுகிட்டு ஓடுது தந்தையே..''

மகாராஜா பிறகு வாயே திறக்கவில்லை.

– ஜி.சாய்லெட்சுமி,
ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சாரதா
மேல்நிலைப் பள்ளி,
அரியகுளம்





ஓட்டு கேட்ட



காட்டுக்குள்ளே ஒருமுறை
தேர்தல் நேரம் வந்ததாம்
போட்டியிட்ட இளம் புலி
ஓட்டு கேட்கச் சென்றதாம்!

வரவேற்ற விலங்குகள்
கோரிக்கைகள் வைத்ததாம்
பாட்டு பாடும் பச்சைக் கிளிக்குப்
பட்டுச் சொக்காய் வேணுமாம்!

சீறி வந்த சிங்கத்துக்கு
சிலிர்க்கும் பிடரியில் சிக்காம்
சீவி அதனைச் சிங்காரிக்க
சீயக்காய் ஷாம்பூ வேணுமாம்!

கரடியாரின் கருகரு முடியோ
காதின் அருகே வெள்ளையாம்
கறுப்பாய் அதனைக் மாற்றிக் காட்ட
கரிய சாயம் தேவையாம்!



புலி!

ஜெயந்த் பாலாஜி



ஆடும் மயிலின் காலுக்கு
அழகு கொலுசு வேணுமாம்
உயரே பறக்கும் கழுகாருக்கோ
உல்லன் உடை அவசியமாம்!

குதித்துச் செல்லும் முயலுக்கு
குஷனில் செருப்பு வேணுமாம்
கறுப்பு யானை கஜமுகனுக்குக்
காது கடுக்கன் ஆசையாம்!

இத்தனையும் அளித்திட்டால்
எல்லா ஓட்டும் நிச்சயமாம்
சொன்ன அத்தனை விலங்குகளும்
''சரியா?'' என்றே கேட்டனவாம்!

ஓட்டு கேட்ட புலியாருக்கு
உதறல் எடுத்துப் போனதாம்
கணக்குப் போட்டு பார்த்ததில்
கோடி ரூபாய் தேவையாம்!

பதவி ஆசை துறந்ததாம்
பதுங்கிப் பதுங்கி நகர்ந்ததாம்
மாற்று வழியே மறுகாட்டுக்கு
மறைந்தே ஓடிப் போனதாம்!








குமரகுருபர சுவாமிகள்

தமிழகத்தின் ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் அவதரித்தார். இவர் ஐந்து வயது வரை ஊமையாயிருந்து பிறகு திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றல் பெற்றார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்.

க. ஷிவானி,
ஐந்தாம் வகுப்பு,
மாடர்ன் சீனியர் செகண்டரி பள்ளி,
சென்னை.



சூப்பர்



ஏ. சதீஸ் குமார்,
ஐந்தாம் வகுப்பு,
புனித சகாய மாதா நடுநிலைப்பள்ளி,
விராலிமலை.

- மனதின் நேர்மையே இன்பம் - ஜேம்ஸ் ஆலன்
- மகிழ்ச்சி என்பது பணியில் இல்லை. மனதில் உள்ளது.
- உன் மனம் எப்படியோ அப்படியே உலகம் - கபீர்தாஸ்.
- வாழ்க்கையில் சம்பாதிக்க கூடியது பொறுமை - வால்டன்
- நேர்மை என்பது ஆன்மிக வாழ்க்கையின் முதுகெலும்பு.
- 10 வெற்றிகளை விட 1 சமாதானம் மேலானது. - மாண்டேகு.



நம்பிக்கையும் வலிமையும்.

நம்பிக்கை, நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை; கடவுளிடத்தில் நம்பிக்கை - இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்.

கு. திவ்யா,
ஒன்பதாம் வகுப்பு,
புனித சூசையப்பர் ஆங்கில வழி மேல்நிலைப்பள்ளி,
ஆற்காடு.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

1869ம் வருடம் அக்டோபர் 2ம் தேதி குஜராத்தில் போர்பந்தரில் பிறந்தார். இவர், இங்கிலாந்தில் சட்ட கல்வி பயின்றார். பின்னர் தென்னாப்ரிகாவில் சட்ட ஆலோசகராக வேலை செய்தார்.



வி. நிகில் வள்ளனா,
ஆறாம் வகுப்பு,
ஜெயம் ஆங்கிலப் பள்ளி,
மூக்குப்பேரி.

கையெழுத்து!





நா. நாகலஷ்மி,
ஏழாம் வகுப்பு,
டி.வி.டி. மெட்ரிகுலேஷன் பள்ளி,
நாகர்கோவில்.

செண்பகராமன் பிள்ளை

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுள் செண்பகராமன் பிள்ளை மிகவும் முக்கியமானவர். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தையே நடுங்க வைத்தவர். ஜெர்மனியிலிருந்து கொண்டே சுதந்திர வேள்வியை நடத்தியவர். எம்டனுக்கு எம்டன் என்று அழைக்கப்பட்டார். கன்னியாகுமரி மாவட்டத்தில் செண்பகராமன்புதூர் என்னும் ஊர் இவரது பெயரால் அழைக்கப்படுகிறது.



பொன்மொழிகள்

1. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
2. வீரமும், விவேகமும் மனிதனின் மாபெரும் பண்புகள்.
3. ஆர்வம் உடையோரே ஆர்வத்தைத் தூண்ட முடியும்.
4. தாயையும் குருவையும் மறக்கக் கூடாது.

கி. விஜய பிரசன்னா,
மூன்றாம் வகுப்பு,
எத்திராஜ் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி,
வேலூர்.

கை கொடு! கை கொடு!!



எச்சரிக்கை பலகை!

மழை நீர் தேங்கிய சிறு பள்ளத்தில் ஸ்கூட்டரில் சென்ற இளைஞன் விழுந்து நனைந்தான்.

கோபமாகி, அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் போல இருந்த நபரிடம், ''இங்கு பள்ளம் இருப்பதை ஒரு பலகையில் எழுதி வைத்திருக்கலாமே?'' என்றான்.

அதற்கு அந்த நபர், ''எழுதித்தான் வைத்தோம் தம்பி, யாரும் விழலை. அப்புறம்தான், ஏன் வீணா அந்தப் பலகைன்னு எடுத்துட்டோம்!'' என்றான்.

வடிகட்டிய கஞ்சன்!

ஒரு கஞ்சன் ஆற்றில் விழுந்து விட்டான். அவ்வழியே போனவர்கள் கையை நீட்டி, ''கை கொடு! கை கொடு!'' என்று கத்தினார்கள்.

கஞ்சன் கையைத் தரவில்லை. ஒரு புத்திசாலி சட்டென யோசித்து ''இந்தக் கையை எடுத்துக்க... இதோ என் கையைப் புடிச்சுக்க!'' என்றதும் கை நீட்டினானாம், சாகும்நேரத்தில்கூட எதையும் தர விரும்பாத கஞ்சன்.



கஞ்சன் வீட்டு விருந்து!

கஞ்சத்தனமான ஒருவன் வீட்டுக்கு விடாக்கண்டன் விருந்தாளியாகச் சென்றான். அந்தக் கஞ்சன் ''நம்ம வீட்லே சாப்பிடுங்கன்னு சொன்னா, சாப்பிடவாப் போறீங்க? உங்க வீட்லேயே சாப்பிட்டுட்டு வந்திருப்பீங்க!'' என்றான்.

''நான் சாப்பிட்டு விட்டேன்னு சொன்னாலும் நீங்க விடவா போறீங்க'' என்றான் விடாக்கண்டன்.

கஞ்சனோ, ''அப்படியே சாப்பிட்டாலும் எங்க பசங்ககிட்டே ஆளுக்கு பத்து ரூபாய் தராமலா போயிடுவீங்க?'' என்றான்.

விடாக்கண்டன், ''உங்க பசங்க நல்ல பழக்கம் உள்ளவங்களாச்சே! மத்தவங்ககிட்டே கை நீட்டிக் காசு பணம் வாங்கற மாதிரியா வளர்த்துருப்பீங்க!'' என்று ஒரு போடு போட்டான்! ☺



ஆர்.ஆர். பூபதி

அடிச்சது யாரு?

கதை: ஜிங்கிள் பெல் கிரியேஷன்
தமிழ் வடிவம்: ராதிகா ரகு




ஆமாம். நான்தான் அடிச்சேன்.
நான் இந்த வழியா போய்ட் டிருந்தேனா...
...அப்ப ஒருத்தன் என்மேல கற்களை வீசினான்.
அதுக்குதான் அடிச்சேன்.
என் பையன் கற்களை வீசினதைப் பார்த்தியா?
இல்லை ஆனா..
...கண்டிப்பா அது உன் பையன்தான்.
எப்படி இவ்வளவு உறுதியா சொல்ற?
ஒரு கல்லுகூட என் மேல படலயே!
©Jingle bell Creation

டாக்டர் பக்கம்



சிரிப்பு என்பது நம் மகிழ்ச்சியின் வெளிப்பாடு. நம் சந்தோஷத்தின் குறியீடு. மனம் மகிழ்ச்சியாக இருந்தால், சிரிப்பு மூலம் முகம் அதை வெளிக்காட்டிவிடும். எந்த விலங்கினத்துக்கும் இல்லாத, மனிதனுக்கு மட்டுமே உரித்தான ஒரு சிறப்பான பண்பு, சிரிப்பு. 'சிரிப்பவர்களைக் கண்டால் எனக்கு நிரம்ப பிடிக்கும்' என்றார் மகாத்மா காந்தி. மூதறிஞர் ராஜாஜி 'புன்னகை தவழும் முகத்துடன் வேலை செய்பவர்கள் திறமையுடனும் ஆர்வமுடனும், சரியாகவும் தங்கள் வேலையைச் செய்கிறார்கள்' என்றார்.

சிரிக்கும்போது நம் உடலில் என்னென்ன மாற்றங்கள் நடக்கின்றன தெரியுமா? வயிறு குலுங்கச் சிரிக்கும்போது உடலில் மொத்தம் ஐம்பத்தேழு தசைகள் வேலை செய்கின்றன. சாதாரண புன்முறுவலுக்கு நம் முகத்தில் பதிமூன்று தசைகள் இயங்குகின்றன. வயிறு குலுங்கச் சிரிப்பவர்கள்



ஹாஸ்யயோக்!

பிராணவாயுவை அதிக அளவில் உட்கொள்கிறார்கள். கரியமில வாயுவை அதிகமாக வெளியேற்றுகிறார்கள். இது உடலில் உண்டாகும் கழிவுகளை உடனுக்குடன் வெளியேற்றி, ரத்தம் நன்றாகச் சுத்தமடைவதற்கு உதவுகிறது. இதன்மூலம் இதயம், நுரையீரல், கல்லீரல், கணையம், மண்ணீரல் போன்ற உயிர் காக்கும் உறுப்புகள் நன்றாக இயங்க உதவுகிறது.

'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' - இந்தப் பழமொழியைக் கேள்விப் பட்டிருப்பீர்கள், இல்லையா? இது மிகவும் உண்மை. மனம் நிறைந்து சிரிக்கும்போது 'என்டார்பின்' எனும் ஹார்மோன் நம் உடலில் சுரக்கிறது. இது ஒரு வலி மறப்பான் மருந்தாகச் செயல்படு





டாக்டர் கு. கணேசன்



கிறது. இதன் பலனாக வலி ஏற்படுத்தும் நோய்களின் தன்மை வெகுவாக குறைகிறது.

அமெரிக்க நாட்டின் பிரபல பத்திரிகையாளர், நார்மன் கொவ்சின். இவருக்கு முதுகுத்தண்டில் வலி, நோய் குணமாகத் தாமதம் ஏற்பட்டது. என்ன செய்யலாம் என யோசித்தார். பழைய திரைப்படக்கருவி ஒன்றை விலைக்கு வாங்கி வீட்டில் வைத்துக் கொண்டார். நகைச்சுவைப் படங்களை தினந்தோறும் பார்த்து ரசித்தார். அப்போதெல்லாம் அவர் வாய்விட்டுச் சிரித்தார். இப்படியே தொடர்ந்து பல நாட்கள் பல்வேறு நகைச்சுவை படங்களைப் பார்த்தார் கொவ்சின். ஒரு படம் பார்க்கும் மூன்று மணி நேரத்துக்கு முதுகுத்தண்டு வலியை முற்றிலும் மறந்தார். மருத்துவர்கள் தந்த மருந்துகளையும் சாப்பிட்டார். இதனால் முதுகு வலி குறைந்து, நோயும் விரைவிலேயே குணமாகிவிட்டது.

இயந்திர மயமாக வாழ்ந்து வரும் இந்நாளில் இளம் வயதிலேயே மன அழுத்தம் அதிகமாகி, உயர் ரத்த அழுத்தம். சர்க்கரைநோய், இதயநோய், மனச்சோர்வு, மனக்கவலை போன்ற மனநோய்கள் ஏற்படுவது அதிகரித்து வருவதாக மருத்துவ உலகம் கவலைப்படுகிறது. இவற்றுக்குத் தீர்வாக மக்கள் அனைவரும் நகைச்சுவை உணர்வை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், சிரிப்பை ஒரு பயிற்சியாகவே மேற்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

சிரிக்கும்போது மன அழுத்தம் குறைகிறது. மனம் லேசாகிறது. கவலைகள் மறைகின்றன. இவை மட்டுமா? சிரிப்பு, கோபத்தைக் குறைக்கிறது. தனிமையை விரட்டுகிறது. மற்றவர்களுடன் இணைந்து பணிபுரியும் 'குழு மனப்பான்மை'யை ஊக்கப்படுத்துகிறது.

தினமும் பதினைந்து நிமிடங்கள் சிரித்தால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி



அதிகமாகிறது என்றும், இதனால் ஆஸ்துமா, ஒவ்வாமை போன்ற நோய்கள் வருவது தடுக்கப்படுகிறது என்றும் அண்மைக்கால ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

சிரிப்பின் சிறப்புத் தன்மை பற்றி பண்டைக் காலத்திலேயே மக்கள் தெரிந்து வைத்திருந்தனர். ஆதிகாலத்தில் நடைமுறையில் இருந்த குருகுலகல்விமுறையில் பலவித யோகாசன உடற்பயிற்சிகள் கற்றுத் தரப்படுவது வழக்கம். அவற்றுள் ஒன்று 'ஹாஸ்யயோக்' எனும் சிரிப்புப் பயிற்சி.

இப்பயிற்சி குறிப்பாக போர்க்காலங்களிலும், இயற்கை அழிவின்போதும், நோய்த் தொற்றுகள் தீவிரமாகப் பரவும் போதும் பயிற்றுவிக்கப்பட்டது. காரணம், இக்காலக் கட்டங்களில்தான் மக்கள் மனஉளைச்சல் மற்றும் பயத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பர். அப்போது அவர்களுடைய மனநிலையை மாற்றி, மகிழ்ச்சியடையச் செய்ய ஏற்படுத்தப்பட்டதே அப்போதைய 'ஹாஸ்யயோக்' சிரிப்புப் பயிற்சி.

தற்போது மனித உடல் ஆரோக்கியதுக்கு சிரிப்பு மிகவும் இன்றியமையாதது என்று உலக ஆராய்ச்சிகள் பலவும் உறுதி செய்துள்ளன. ஆகவே, சிரிப்பு எனும் மனித குணத்தை ஒரு சிகிச்சை முறையாக இணைத்துள்ளனர். இதனால் உலகில் 'சிரிப்புச் சிகிச்சை' இப்போது பிரபலமாகி வருகிறது. அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற மேல்நாடுகளில் 'சிரிப்பு மருத்துவமனைகள்' தொடங்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் கூட இத்தகைய மருத்துவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மேலும், நகைச்சுவை உணர்வை பொது மக்களுக்கு அதிகப்படுத்தும் விதத்தில் பல நகரங்களில் 'சிரிப்புச் சங்கங்கள்' இயங்கி வருகின்றன.



சிரித்த முகத்துடன் உள்ளவர்களுக்கு சமூகத்தில் மதிப்பு கூடும். நகைச்சுவை ததும்ப பேசுபவர்களைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும். பல புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். ஆகவே, நீங்களும் உங்கள் நகைச்சுவை உணர்வை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். பிறரைக் கேலி செய்யாமல், நகைச் சுவையுடன் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.

☺





என் பெயர்

ஸ்டிரைக் என்றால் என்னவென்று கேட்ட தென்றலை அவர் ஆச்சர்யத்துடன் பார்த்துவிட்டு, விளக்கமாகச் சொன்னார்.

''வேற வழி எதுவும் இல்லையா ஐயா?'' என்று கேட்டாள் தென்றல்.

அவருக்குத் தென்றலைப் பார்க்க பாவமாக இருந்தது. ஒன்றும் தெரியாத கிராமத்துப் பெண் என்று அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும். ஐயா என்று அழகு தமிழில் யார் அழைக்கிறார்கள் இப்போதெல்லாம்?

''சரிம்மா. நீ இங்கேயே இரு. ஏதாவது ரிக்ஷா வரும். ஏத்தி அனுப்பறேன். பயப்படாதே'' என்றார்.

தலையை ஆட்டி விட்டு, அருகிலிருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டாள் தென்றல்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. திடீரென்று அந்த குரல்.

''ஆனந்தி!''

தென்றல் திரும்பவில்லை. எடை பார்க்கும் மிஷினை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'மினுக் மினுக்' என்று விளக்குகள் அழகாக மின்னிக்கொண்டிருந்தன.

''ஆனந்தி!''

சடாரென்று திரும்பினாள் தென்றல். 'ஆ! என் பெயர் ஆனந்தி அல்லவா? நான் இங்கே தென்றல் கிடையாதே.'

இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார் அந்தப் பெண். கண்ணாடி அணிந்திருந்தார். தோளில் ஒரு துணிப்பை. 'யார் இவர்? ஆனந்திக்குத் தெரிந்தவரா? ஸ்கூல் டீச்சரா? பக்கத்து வீட்டுப் பெண்மணியா? என்ன பேசுவது இவரிடம்?'

''உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா இப்படி திடீர்னு வீட்டை விட்டுக் கிளம்பியிருப்பே?''

திக்கென்றது தென்றலுக்கு. ஐயோ, ஒருவேளை ஆனந்தியின் அம்மாவாக இருப்பாரோ! இழுத்துப் பிடித்து கன்னத்தில் நான்கு வைப்பார் என்று நினைத்தாள் தென்றல். நல்லவேளை, அப்படி எதுவும் நடக்கவில்லை.

தென்றல் வாயைத் திறப்பதற்குள் அவளை இழுத்து தன்னோடு அணைத்துக்கொண்டார் அவர்.

''உன்னைக் காணாம எப்படியெல்லாம் தவிச்சோம் தெரியுமா? தெரிஞ்சவங்க எல்லார்கிட்டேயும் பேசிட்டேன். அப்பா அவர் பாட்டுக்குத் தனியா தேடிக்கிட்டிருக்காரு. ஹா.. இப்பவாவது கிடைச்சியே சரிவா வீட்டுக்குப் போகலாம். வீட்டுல வச்சுப் பேசிக்கலாம்.''

தென்றலை அணைத்துக்கொண்டு அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டார் அவர்.

''கோயமுத்தூர்ல இருக்கிற சித்தப்பாவைப் பார்க்கலாம், ஒருவேளை நீ அங்கே போயிருப்பேன்னு நினைச்சுதான் சென்ட்ரல் வந்தேன். நல்லவேளை நீ கிடைச்சுட்டே'' என்றவாறு, அம்மா முன்னால் நடக்க, தென்றல் பின் தொடர்ந்தாள்.

இரு சக்கர வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டாள் தென்றல். கற்பகம்! அதுதான் அம்மாவின் பெயர். இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. எதுவுமே

பேசாமல் சும்மா இருக்கிறோமே. என்ன பேசுவது?'

மன்னிப்பு கேள் என்று ஆனந்தி சொல்லியனுப்பயிருந்தாள். ஒரு ஐடியாவும் சொல்லிக் கொடுத்திருந்தாள்.

''அம்மா, என்னை மன்னிச்சுக்கோங்க. உங்கக்கிட்ட சொல்லாம கிளம்பிட்டேன். அதுக்கு ஒரு காரணம் இருக்கு. சொன்னா நீங்க திட்டுவீங்க.''

''பரவாயில்லை சொல்லு.'' என்றார் கற்பகம், வண்டியை ஓட்டிக்கொண்டே.

''நீங்க கொடுத்த ஸ்கூல் ஃபீஸை வழியிலே தொலைச்சுட்டேன். உங்கக்கிட்ட சொல்றதுக்கு பயம். அதனால, என் ஃப்ரண்ட் வீட்டுக்குப் போயிட்டேன்.''



''அட அசட்டுப் பெண்ணே, இதுக்குப் போய் இப்படிச் செய்யலாமா? நாங்க எவ்வளவு பயந்துட்டோம் தெரியுமா?''

கற்பகம் பேசிக்கொண்டே வந்தார். யார் யாரையோ பார்த்தது, எப்படியெல்லாமோ தேடியது. தென்றலுக்குப் பாவமாக இருந்தது. 'ச்சே, ஆயிரம் காரணங்கள் சொன்னாலும் ஆனந்தி செய்தது தவறுதான். இப்படியா அம்மாவைத் தவிக்க விடுவது?'

அரை மணி நேரத்தில், மைலாப்பூர் வந்து

தென்றல்!

மருதன்





''அடிக்கடி கனவு வர்றதைப் படிப்படியா குறைக்க மாத்திரை தந்தேனே... பலன் எப்படி?''

''முதல்ல கனவுல யானையும், பாகனும் வந்தாங்க. இப்ப யானை மட்டும்தான் வருது.''

- ஆர்.அருண்குமார்

சேர்ந்தார்கள். அப்பா வீட்டில்தான் இருந்தார். தென்றலைப் பார்த்ததும் வாசலுக்கு ஓடி வந்து விட்டார் அவர்.

''ஆ, ஆனந்தி வந்துட்டியா?''

தென்றலை அப்படியே அள்ளிக்கொண்டார் அவர்.

சிறிது நேரத்தில், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். 'எங்கே போனாய்? ஏன் சொல்லாமல் போனாய்? எங்கே சாப்பிட்டாய்? யாருடன் தங்கினாய்? ஃப்ரண்ட் என்றால் யார்? பெயரென்ன? எந்த ஊர்? என்ன பேர்?'

ஆனந்தி சொல்லிக் கொடுத்திருந்தாள். அதன்படி எல்லோருக்கும் பொறுமையாக பதிலளித்தாள்.

பத்தே நிமிடங்களில் எல்லோரும் கலைந்துவிட்டார்கள். டிவியை ஆன் செய்துவிட்டு அம்மா அடுப்பறைக்குள் நுழைந்து காணாமல் போய்விட்டார். இனிமேல் ஒழுங்கா இருக்கணும் சரியா என்று சொல்லிவிட்டு அப்பா பேப்பர் படிக்க ஆரம்பித்துவிட்டார்.

'ஆக, ஒருவருக்கும் அடையாளம் தெரியவில்லை, நல்லது.'

தென்றல் வசதியாக சோஃபாவில் சாய்ந்து உட்கார்ந்தாள். டி.வி.யில் வந்த காட்சியை இமைக்காமல் பார்த்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் பழகிக்கொண்டாள் தென்றல். எல்லாம் ஒரே நாளில். ஃப்ரிட்ஜ்! எல்லாமே ஜில்! பழம் முதல் தண்ணீர் வரை. மோர் முதல் கீரை வரை. எல்லாமே ஜில்! எல்லாமே ஃப்ரெஷ். பிறகு, ஐஸ்க்ரீம். வாயில் வைக்கும்போதே கரைந்துவிடும் அற்புதம்.

பிறகு, விசிடி பிளேயர், மின்விசிறி, சொய்ங் என்று சத்தம் போடும் பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், சுற்றி சுற்றி வந்தாள் தென்றல்.

கற்பகத்துக்குச் சில சமயம் ஆச்சரியமாக இருந்தது. என்ன இவள், வழக்கத்தை விட அமைதியாக இருக்கிறாள். துறுதுறுவென்று நிறைய சுற்றுகிறாள். முகத்தை உம்மென்று வைத்துக்கொள்ளாமல் உற்சாகமாக இருக்கிறாள். ஏதாவது அதிசயம் நடந்துவிட்டதா என்ன?

மாலை ஐந்து மணிக்குத் தென்றலுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. ஆனந்தி அங்கே என்ன செய்துகொண்டிருப்பாள்? தாத்தாவுடன் ஒட்டிக்கொண்டிருப்பாளா? என்னைப் போலவே அவளும் சந்தோஷமாக இருப்பாளா?

''லொள்.. லொள்...''

சத்தம் கேட்டுச் சடாரென்று திரும்பினாள் தென்றல். நாய்க்குட்டி ஒன்று இவளைப் பார்த்தபடி ஆக்ரோஷமாகக் குரைக்கத் தொடங்கியது.

(தொடரும்)





கதை : வாண்டுதாசன்
படம் : பிள்ளை





வண்ணம் தீட்டுங்கள்!

இந்தப் படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்க!





எத்தனை முட்டைகள்?

இந்தப் படத்தில் உடையாத முட்டைகள் எத்தனை உள்ளனவென்று கண்டுபிடிங்க!



விடை 48-ஆம் பக்கம்



யாருக்குக் கிடைக்கும்?

விடை 48-ஆம் பக்கம்





என்னைப் போல யாரு?


நான்கு பேருல
என்னை மாதிரியே
இருக்கிறது யாருன்னு
தெரியுதா?
விடைக்கு 48-ஆம்
பக்கம் பாருங்க!
1
2
3
4


வீட்டு ஹாலை மைதானமாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.
... ஓய்! சுரேஷ் இந்த சோபா ரொம்ப வெயிட். தனியா தள்ள முடியலை. ஹெல்ப் பண்ணு.
இதோ வரேன்.
ஹிப்..ஹிப்.. ஹுர்ரே!

வித்தியாசங்களைக்



இரண்டு படங்களுக்கிடையே எத்தனை



கண்டுபிடி!


விடை 48-ஆம் பக்கம்



வித்தியாசங்கள் உள்ளன?



ஹாரி பாட்டர்





ஏட்டிக்குப் போட்டியா பேசறதே உன் வேலை. சரி, கெட்டியாப் பிடிக்க்க.
ம்... ம்... நல்லா அடி.
... ஆனா தரை, டேபிளை எல்லாம் நீதான் க்ளீன் செய்யணும் சரியா?
ஆ! பூச்சி.

கோகுலம் ஆல்பம்








இங்குள்ள
ஹாரி பாட்டர் படங்களைக்
கத்தரித்து, நோட்டுப் புத்தகத்தில்
ஒட்டிக்கங்க குட்டீஸ்!




ஒற்றுமை என்ன?




ஹா... ஹா... நல்லா வேணும். இதுதான் முற்பகல் செயின் பிற்பகல் விளையும்.
சொன்னா கேளுடா நான்... ஆ!
என்னடா செயின் வளையல்னு கிண்டல் பண்றே! இந்தா வாங்கிக்க... குத்து.
ஆவ்! உன்னை ..



இந்தப் படத்திலுள்ள
ஓர் ஒற்றுமை என்னவென்று தெரிகிறதா?
விடை 48-ஆம் பக்கத்தில்...




என்ன இது? எங்கே இது?



இங்குள்ளவை என்னவென்று கண்டுபிடியுங்கள்!




விடை
48-ஆம் பக்கம்



இங்குள்ள கட்டங்களில் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலும் கீழுமாக சில விளையாட்டுகளின் (ஸ்போர்ட்ஸ்) பெயர்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்!

டெ	ன்	னி	ஸ்	கி	க்	ஹா
ல்	பா	லி	வா	ரி	டு	ங்
ங்	னி	ன்	ர	க்	கு	டி
ஹை	ஜ	ம்	ப்	கெ	டு	ட்
ல்	பா	ட்	பு	ட்	ச	கே
சு	ச்	மூ	ணா	ண்	க	ஸ்












கண்டுபிடி! கண்டுபிடி!







ஈவ்னிங் ரெண்டு பேரையும் பீச்சுக்குக் கூட்டிட்டுப் போவோம். சுரேஷ்.. நரேஷ்...
கதவு திறந்தே இருக்கு. வாங்க உள்ளே போவோம்.
ஆ! இதென்ன அலங்கோலம்!
டேய் பசங்களா!

வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!



இந்தப் படத்திலிருந்து
ஐந்து துண்டுகள் தனியே உள்ளன.
அவற்றை வெட்டியெடுத்து, சரியான
இடத்தில் ஒட்டுங்கள்!








விடைகள் பக்கம்

என்ன இது?









என்ன இது?

வித்தியாசங்கள்

1. சிறுமியின் சட்டை டிசைன்
2. பறவைகளின் எண்ணிக்கை
3. பலூன் டிசைன் நிறம்
4. சிறுவனின் சட்டை டிசைன்
5. சிறுவனின் தலைமுடி

ஒற்றுமை என்ன?

எல்லா விலங்கினங்களும் இரண்டிரண்டாக உள்ளன.

எத்தனை முட்டைகள்

உடையாத முட்டைகள் : 8

என்னைப் போல யாரு?


3

கண்டுபிடி! கண்டுபிடி!

டெ	ன்	னி	ஸ்	கி	க்	ஹா
ல்	பா	லி	வா	ரி	டு	ங்
ங்	னி	ன்	ர	க்	கு	டி
ஹை	ஜ	ம்	ப்	கெ	டு	ட்
ல்	பா	ட்	பு	ட்	ச	கே
க	ச்	மூ	ணா	ண்	க	ஸ்

யாருக்குக் கிடைக்கும்?

சப்பு



போட்டி முடிவு

ஜூன் இதழில் அறிவித்த 'என் வீட்டுச் செல்லக்குட்டி' போட்டியில் கலந்து கொண்டு தலா ரூ.250/- பரிசு பெறும் அனுபவங்கள்.

வெள்ளை மனசு!

என் அப்பா எனக்காக வெள்ளை நிறத்தில் ஓர் ஆட்டுக் குட்டியை வாங்கிக் கொடுத்தார். அதைப் பார்த்ததுமே எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதனை அன்புடன் வளர்க்க ஆரம்பித்தேன். நான் படித்துக் கொண்டிருக்கும்போது அது அமைதியாக பக்கத்தில் வந்து நிற்கும். அதன் தலையை வருடி, இரண்டு, மூன்று வார்த்தையாவது பேசுவேன். உடனே சென்று விடும். சில சமயம் எதுவும் பேசாமல் படித்துக் கொண்டே இருப்பேன். சற்று பொறுத்துப் பார்த்து விட்டு தனது நாக்கினால் என் சட்டையை நக்கும். விரட்டினாலும் போகாது. பிறகு சிரித்தவாறு தலையை வருடி "போடா" என்பேன். பிறகுதான் செல்லும். அதை தினசரி குளிக்க வைப்பேன். புல், தழைகளைத் தருவேன். நான் பள்ளி விட்டு வீட்டுக்கு வந்தால் வாசலில் மண்டியிட்டு காத்திருக்கும். இதுதான் எனது செல்லப் பிராணி.

- த.ஆகாஷ்மாரி, ஆறாம் வகுப்பு,
ஸ்ரீசங்கரா நடுநிலைப் பள்ளி,
கடையநல்லூர்

மிமிக்ரி மைனா!

எங்கள் வீட்டுச் செல்லக்குட்டி மைனா.



என் வீட்டுச் செல்லக்குட்டி!

வின்னர்ஸ்!



'போஸ்டரைச் சேகரிங்க; பரிசுகளை வெல்லுங்க' போட்டியில் கலந்து கொண்டு ஆறுதல் பரிசாக கோகுலம் ஆறு மாதங்களுக்கு சந்தாவாகப் பெறும் வாசகர்கள் :

1. ர.காயத்ரி, கோவில்பட்டி
2. வெ.பிரகாஷ், பள்ளிபாளையம்
3. வி.ஜெயஸ்ரீ, சென்னை
4. ஜெ.ஹரீஸ்குமார், பாண்டமங்கலம்
5. ம.அகஸ்டஸ், கரூர்
6. சு.பாரதி, திருத்துறைபூண்டி
7. சி.பிரபு, சிலாங்கூர்
8. ஏ.சுவாதி, சென்னை - 21
9. க.தினேஷ், திருச்சி
10. எம்.பிரபாகரன், கருப்பணம்பட்டி
11. ஆர்.ஐஸ்வர்யா, சென்னை-33
12. மு.சோமேஸ்வர், கோவை
13. வி.ராஜா, சீர்காழி
14. ஏ.சுமதி, அத்திமாஞ்சேரிபேட்டை
15. இ.இராஜேஷ், அரித்துவாரமங்கலம்
16. எஸ்.கார்த்திக், கரூர்
17. கோ.ஸ்ரீராம், சென்னை - 8
18. ஜெ.விண்ணரசி, சென்னை-75
19. ப.சங்கீதா, தச்சநல்லூர்
20. என்.சாய்பத்மாவதி, மதுரை

வாழ்த்துகள் நண்பர்களே!

இதற்கு நாங்கள் 'ருகையா' என பெயர் வைத்திருக்கிறோம். இதற்கு முன்னர் 'ஆமினா' என்ற பெயர் வைத்து ஒரு மைனாவை வளர்த்தோம். அது நாங்கள் கேரம் விளையாடும் பொழுதெல்லாம், கேரம் போர்ட் மேல் வந்து நின்று காய்களை நகர்த்திவிடும். போன வருஷம் எங்கள் ஆமினா மைனா இறந்துவிட்டது. அதற்கு பின் 'ருகையா'வை வாங்கி வளர்த்தோம்.


ருகையாவுக்குச் சப்பாத்தி, பிரியாணி மற்றும் இடியாப்பம் என்றால் கொள்



ளைப் பிரியம். சமைக்கும் வாசனை வந்தால் சாப்பாட்டு மேஜைக்கு வந்து நிற்கும். ஒரு ட்ரேயில் தண்ணீரை நிரப்பி, குழாயை இலேசாகத் திறந்து வைத்துவிட்டால் ருகையா தானாகக் குளித்துவிட்டு வரும். ஆனால் யாரும் கிட்டே நின்றுவிடக்கூடாது. அவ்வளவு கூச்சம் ருகையாவுக்கு! சிறு குழந்தைகள் அழும் சத்தம் கேட்டால் நாக்கடிக்கும்; கிளுகிளுப்பைப் போல் சத்தமிடும். ஆனால் இதற்கெல்லாம் மூட் இருந்தால்தான் செய்யும். நாமாகக் கேட்டால் செய்யாது!

- எம்.எஸ்.சுஹைல் அஹ்மத், எட்டாம் வகுப்பு, நேஷனல் அகாதெமி பள்ளி, கீழக்கரை

காலணிகள் எங்கே?



நான் எங்கள் வீட்டில் ஒரு குட்டி நாய் வளர்க்கிறேன். அது மிகவும் பாசமானது. ஒருநாள் எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒரு விசேஷம் நடந்தது. அதற்கு வந்தவர்கள் தங்களது காலணிகளை வாசலில் கழற்றி விட்டுச் சென்றனர். அவற்றை என் குட்டி நாய் எங்கள் வீட்டில் ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து போட்டு விட்டது! அனைவரும் காலணிகளைத் தேடினர். தற்செயலாக வெளியே வந்த நான், இந்தக் காட்சியைப் பார்த்தேன். அவர்களிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டேன்.

அவர்கள் சிரித்து, நாய்க்குட்டியைக் கொஞ்சி விட்டு சென்றனர். இந்த விஷயம் தெருவில் உள்ள மற்ற வீட்டினருக்கும் தெரிந்தது. நாங்கள் மட்டும் இல்லாமல் எங்கள் தெருவைச் சேர்ந்த அனைவரும் எங்கள் நாய்க்குட்டியிடம் பாசமாக உள்ளனர்.

- பா.நா.பிரபாகரன், பன்னிரண்டாம் வகுப்பு, மன்னர் மேல்நிலைப் பள்ளி, சிவகங்கை



தேடி வந்த புஜ்ஜி!

எங்கள் வீட்டில் ஒருநாள் பூனைக் குட்டி ஒன்று வந்தது. யார் வீட்டுக் குட்டி என்று தெரியாது. ஒரு பிளாஸ்டிக் தட்டில் பால் வைத்தோம். சாப்பிட்டது. எங்கோ சென்றது. பின்னர் திரும்பவும் இரவு வந்து விட்டது. வீட்டிலே இருந்துவிட்டது. அதற்கு புஜ்ஜி என்று பெயரிட்டோம். நாங்கள் எதைச் சாப்படுகிறோமோ அதையே அதற்கும் போடுவோம். அழகாக சாப்பிடும். ஒருநாள் அம்மா துணிகளை மடித்து அலமாரியில் வைத்துவிட்டு சமைக்க சென்றுவிட்டார். இந்த புஜ்ஜி பூனை என்னடாவென்றால் துணிமேல் நன்கு படுத்துத் தூங்கிவிட்டது. மறுநாள் பார்த்த எங்களுக்குச் சிரிப்புதான் வந்தது. அப்பா அந்தப் பூனைக்காக இலவம் பஞ்சு வைத்த 'மெத்' 'மெத்' தலையணை ஒன்றை வாங்கி வந்தார். தினமும் அதில்தான் படுத்துக் கொள்ளும். புஜ்ஜி எங்களுடன் ரொம்ப செல்லம் கொஞ்சும்.

- ரா.சாய்ராம், பத்தாம் வகுப்பு, பம்மல் சம்பந்தனார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை ☺





இன்று எத்தனையோ கார்ட்டூன் சேனல்கள் போட்டி போட்டுக் கொண்டு குட்டீஸ்களை குஷிப் படுத்த களத்தில் குதித் துள்ளன. புதிய புதிய கேரக்டர்களை உருவாக்கி உலவ விட்டுள்ளன. எத் தனை கார்ட்டூன் சீரியல்கள் பார்த்தாலும் எல்லாவற்றையும் மீறி மனத்தில் முதல் இடம் பிடிப் பது டாம் அண்டு ஜெர்ரிதான் அல்லவா?

சாம்பல் நிறத்தில் பெரிய உருவத் துடன் இருக்கும் டாம் என்கிற பூனையும், செந்நிற, சிறிய உருவத்தில் இருக்கும் ஜெர்ரி என்கிற எலியும் அடிக்கிற லூட்டி யைப் பார்த்து, சிரித்து சிரித்து வயிறே வலி கண்டு விடும்.

நம்மையெல்லாம் கண்ணில் நீர் வரும்படி சிரிக்க வைப்பதற்காக பாடுபட்ட வர்கள் யார் தெரியுமா? அமெரிக்கர்களான ''ஜோசப் ரோலாண்ட் பார்பரா'' என்பவரும் ''வில்லியம் டென்பி பில் ஹான்னா'' என்பவரும்தான்.




* பார்பரா, ஹான்னா

நியூயார்க் நகரில் பிறந்த ''பார்பரா'' தமது பள்ளிப் படிப்பின் பொழுதே ஒரு தையல்காரரிடம் எடுபிடி பையனாக வேலைக்குச் சேர்ந்தார். இயற்கையிலேயே கலையார்வம் கொண்ட அவருக்கு, கார்ட்டூன் வரைவதில் ஆர்வம் ஏற்பட்டது. தாம் வரையும் படங்கள் பத்திரிகையில் பிரசுரம் ஆகவேண்டுமென தணியாத ஏக்கம். பத்திரிகைகள் அவர் படங்களைப் பிரசுரிக்காதபொழுது மிகுந்த மனவருத்தம் உண்டாயிற்று. 'ஏமாற்றத்தையே வெற்றி யின் முதற்படியாக ஏற்றுக் கொள்வேன்' என்று மன உறுதியை மேம்படுத்திக் கொண்டார்.

எந்நேரமும் பென்சிலும் பேப்பருமாக பக்கம் பக்கமாக வரையத் தொடங்கிய அவரது கார்ட்டூன்கள், நாளடைவில் சில பத்திரிகைகளில் பிரசுரமாயின.

படிப்படியாக முன்னேறி ஸ்கிரிப்ட் எழுதத் தொடங்கினார். கதை எழுதி,




டாம் & ஜெர்ரி

சித்திரம் வரைந்து தம் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்துடன் MGM (Metro Goldwyn Mayer) ஸ்டுடியோவில் வேலைக்குச் சேர்ந்தார்.

அங்கு கார்ட்டூனிஸ்டாக வேலையிலிருந்த ''ஹான்னா'' வுடன்' நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 'இருவருமே கதை எழுதி, புதியதாக புரட்சிகரமாக ஏதாவது செய்யலாமே' என்று தம் எண்ணத்தை வெளியிட்டார் ஹான்னா.

அப்படி வெளியானதுதான் "Puss Gets into the Boot" எனும் அவர்களின் முதல் கார்ட்டூன் படம். அதில் பூனைக்கும், எலிக்கும் பெயரிடப்படாமல் இருந்தது. அந்த கார்ட்டூன் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அப்பிராணிகளுக்கு டாம் அண்டு ஜெர்ரி என்று பெயரிடப்பட்டு 1940 முதல் 1957 வரை நூற்று பதினான்கு கதைகள் (டாம் அண்டு ஜெர்ரி) அவர்களால் எழுதப்பட்டு உலா வந்தன.

எழுத்தாளரும், இன்ஜினியர் துறையில் படித்தவருமான 'ஹாண்ணா' டாம் பூனைக்குக் குரலையும் கொடுத்தார்.



பதனேழு வருட ஒற்றுமையான உழைப்பினால் 'சிறந்த கார்ட்டூன் குறும்படங்கள்' வரிசையில் ஏழு முறை 'அகாதெமி அவார்டுகள்' பெற்றனர்.

ஒரு காலக்கட்டத்தில், 'ஹான்னா பார்பரா புரொடக்ஷன்ஸ்' என்கிற பெயரில் இருவரும் தனியாகவே படத் தயாரிப்பு கம்பெனி ஒன்றைத் தொடங்கினார்கள். அவர்களின் தயாரிப்பில் வெளிவந்ததுதான் பிரபலமான 'தி ஃபிளின்ட் ஸ்டோன்ஸ்' (The Flintstones), 'ஸ்கூபிடூ' (Scooby-doo) கார்ட்டூன் படங்கள்.

இருவருமே தங்களின் தொண்ணூறாவது வயதில் மறைந்தாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட டாம் அண்ட் ஜெர்ரி காலங்கள் கடந்து அனைவரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறது. ☺

மாலதி சந்திரசேகரன்

கவிதைப் பூங்கா

ஏட்டிக்குப் போட்டி!



ஏட்டிக்குப் போட்டியா நடக்காதே
எல்லாம் தெரியும்னு நினைக்காதே!
சோம்பித் தூங்கிக் கிடக்காதே
சொப்பனம் சுகம்னு இருக்காதே!

கூப்பிட்டு நிறுத்தியும் குளிக்காம
குறும்பு செய்யறே அடங்காம!
சாப்பிடச் சொன்னா கேட்காம
சண்டைப் போடற மதிக்காம!

அம்மா அப்பாவை மதிக்கணும்
அன்பா பிறரிடம் பழகணும்!
ஏச்சுப் பேச்சை ஒழிக்கணும்
என்றும் நல்லதே நினைக்கணும்!

- வெ.தமிழழகன்

மனசாட்சி

நல்லதொரு நண்பனாம்
நமக்கு உள்ளே இருக்கிறான்
நல்லவராய் இருந்திடவே
நாலும் தெரிந்து சொல்கிறான்

கோபம் எட்டிப் பார்க்கையில்
குட்டி நம்மை அடக்குவான்
சந்தோஷமாய்ச் சிரிக்கையில்
சப்தமாக ஒலிக்கிறான்.

பிறரை ஏய்க்கும் முன்னரே
நம்மைத் திருத்த நோக்குவான்
பிடிவாதம் பிடிக்கையில்
பிடிகயிறாய் இருக்குவான்

நல்லதை மட்டும் சொல்வான்
நடுநிலை தவறா மன்னனாம்
அவன் தான் மனசாட்சியாம்
அன்பே அவன் ஆட்சியாம்!

- எஸ்.சங்கீதா,
பெரியகுளம்





சுத்தம்!

ஆலை நீரின் கழிவெலாம்
ஆற்று நீரில் கலப்பதால்
நாளும் நமது உடலினில்
நச்சுத் தன்மை கலந்திடும்!

கழிவு நீரைக் குடித்திடும்
கால் நடைகள் மடிந்திடும்
கழிவு நீரால் பயிரெலாம்
காய்ந்து கருகி அழிந்திடும்!

சுத்தம் நமது வாழ்க்கையின்
சுருதி யென்று நம்புவோம்!
நாட்டின் தூய்மை காத்திட
நித்தம் உறுதி கொள்ளுவோம்!

- திலீபன்

சிரிப்பலை



ஆறுல ஆறு போனா என்ன வரும்?

''அந்தக் குதிரை ஏன் உங்க தாத்தாவையே சுத்தி வருது?''

''அவர்தான் 'கொள்ளு' தாத்தா வாச்சே.''

- எஸ்.சங்கீதா, தேனி



''தபால் கவர்ல ஐந்து ருபாய் ஸ்டாம்ப் ஒட்டி கவரை தபால் பெட்டியில போடச் சொன்னேனே போட்டியா?''

''போஸ்டாபீஸ்ல ஸ்டாம்ப் தீர்ந்திடுச்சாம் அப்பா. அதனால கவரையும் ஐந்து ருபாயையும் தபால் பெட்டியிலேயே போட்டுட்டேன்..!''

- வி.வேல்முருகன், சேலம்

''ஆறுல ஆறு போனா என்ன வரும்?''

''பெரும் வெள்ளம் வரும் டீச்சர்.''

- க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி





''அந்தக் காலத்தில் வள்ளல்கள் கடை வைச்சிருந்தாங்களாடா?''

''இல்லையே!''

''பின்னே ஏன் கடை ஏழு வள் ளல்கள்னு சொல்றோம்.''

- மா.கண்ணன், திருச்சி



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

உங்கள்



சு.வரலட்சுமி,
எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி




ர. பாலாஜி,
எட்டாம் வகுப்பு,
அண்ணா ஜெம் மெட்ரிக் பள்ளி,
சென்னை



ஆர். நாராயணன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப்
பள்ளி, பட்டுக்கோட்டை

கைவண்ணம்!



மீ.பிரபு
வைரவேல்,
நான்காம் வகுப்பு,
ஆனந்தா
வித்யாலயா,
இராசபாளையம்





ப.சபரிராஜன்,
ஏழாம் வகுப்பு,
சின்னசாமி அம்மாள்
ஆண்கள் உயர்நிலைப்
பள்ளி, திருப்பூர்

அறிவியல் பூங்கா

ஏலேலேலோ

டியர் சில்ட்ரன்! போன மாசம் ஆல்ப்ஸ் மலையை ரவுண்ட் அடிச்சோமில்லியா? இந்த மாசம் எவரெஸ்ட் போகலாம் வாங்க.

எவரெஸ்ட் சிகரத்தை திபெத்திய மக்கள் 'சாமோலுங்க்மா' அல்லது கூமோ லாங்க்மா என அழைக்கின்றனர். அதன் பொருள் 'உலகத் தாய்' என்பது.

சீன மொழியில் 'சூமூலாங்க்மா பெங்க்' என அழைக்கிறாங்க. டார்ஜிலிங் பகுதியில இருக்கிற மக்கள் 'டியூடங்கா' என்பார்கள். இதனுடைய பொருள் 'புனித மலை' என்பது. நேபாளி மொழியில் 'சாகர் மாதா' என அழைத்து மகிழ்கிறார்கள். அப்படின்னா 'வான் உச்சி' எனப் பொருள்.



* டென்சிங் நார்கே

இந்த மலைக்கு எவரெஸ்ட்ன்னு பேர் வைத்தது யாரு தெரியுமா? 1865ஆம் ஆண்டு 'ஆண்ட்டு வாவ்' என்கிற ஆங்கிலேயர் 'சர் ஜார்ஜ் எவரெஸ்ட்' என்பவரின் ஞாபகமாக இந்தப் பெயரை வைத்தார்.

2002ஆம் ஆண்டு சீன செய்தித்தாளில் போட்டிருந்த செய்தி என்ன தெரியுமா? எவரெஸ்ட்டைத் திபெத்திய பெயரில்தான் அழைக்கணுமாம். 'கூமோ லாங்க்மா'ன்னு.

இராதாநாத் சிக்தர் என்பவர்தான் 1852ஆம் ஆண்டு, எவரெஸ்ட் உலகிலேயே உயர்ந்த மலைச் சிகரம் என்பதைச் சொன்னார். இறுதியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி மலையின் உயரம் 8,848 மீட்டர் அதாவது 29,028 அடி.

எவரெஸ்ட் இவ்வளவு உயரமாக இருந்தாலும் கூட, இதைவிட ஆழமானது கடல்தாங்க. யாராவது எவரெஸ்ட் மலையைத் தூக்கி, ஆழ்கடலில் ஆழமான பகுதியில வைத்தாலும், எவரெஸ்ட் மலைச் சிகரத்தையும் கடந்து இரண்டு கிலோ மீட்டருக்குத் தண்ணீர் நிற்குமாம்

எவரெஸ்ட் மலைச் சிகரத்தை





எவரெஸ்ட்!


முனைவர் ஆசுரா



1953ஆம் ஆண்டு மே 29ம் தேதி நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த, 'எட்மண்ட் ஹில்லாரி' மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த 'டென்சிங் நார்கே' முதன் முறையாக அடைந்தனர். 2003ஆம் ஆண்டில் எவரெஸ்ட் அடைந்த ஐம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக, நிறைய குழுக்கள் எவரெஸ்ட் நோக்கிப் படையெடுத்தாங்க. 2004ஆம் ஆண்டு வரை 2,238 பேர் எவரெஸ்டில் ஏறியிருக்காங்க.

எவரெஸ்டில் ஏறும்போது முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னன்னா... ஆக்சிஜன் முகமூடி, ஆக்சிஜன் தொட்டி தான். 26,246 அடிகளுக்கு மேலே போகும்போது கண்டிப்பாக ஆக்சிஜன் தேவை. இதை 'மரணக்களம்' என அழைக்கிறாங்க. ஆக்சிஜன் இல்லாமலும் பயணம் செய்யலாம். 'பட்' இது பாதுகாப்பான பயணமாக அமையாது. 8,000 மீட்டர் உயரத்துக்கு மேலே செல்லும்போது வெப்பநிலை மிகக் குறைவாக இருக்கும். வெளியே காற்றில் தட்டுப்படும் நம் வெற்றுடம்பு உறைந்து போகும் வாய்ப்பிருக்கு. மலையேற்ற வீரர்களுக்கு அடுத்து வரும் பெரிய சிக்கல் 'காற்று'தான். காற்றுன்னா சாதாரணமா மொட்டை மாடியில வாங்கற மாதிரி இல்லை, பெருங்காற்று. நாம மாட்டினா காத்தாடி மாதிரி பறக்க வேண்டியது தான்!

எவரெஸ்டில் 6700 மீட்டர் உயரத்தில் சிறிய கறுப்புச் சிலந்தி வாழ்வதைப் பார்த்திருக்காங்க. சிறிய சிலந்தியே சிகரம் தொடும்போது... நாம் தொட முடியாதா என்ன? உங்களில் யாராவது அப்படி சிகரத்தைத் தொட்டுட்டு வந்தீங்கன்னா எனக்கொரு லெட்டர் போடுங்க! ரொம்ப சந்தோஷப்படுவேன். மறுபடியும் அடுத்த மாசம் பார்க்கலாம்! ☺



* எட்மண்ட் ஹில்லாரி



சிறுகதை

தென்னை மரத்திலிருந்த ஒரு குறும்பைக்கு வினோத ஆசை வந்தது. மனிதர்கள் கை, கால்களுடன் நடப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது. அதுபோல் தனக்கும் கை கால் முளைத்தால் எப்படி இருக்கும்? என்ற ஆசைதான் அது!

அன்று இரவெல்லாம் குறும்பை தூங்காமல் கண் விழித்து வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது வானில் இருந்து ஒரு நட்சத்திர ஒளி கிளம்பி அருகில் தேவதையாய் உருமாறி நின்றது.

''குறும்பையே! ஏன் சோகமாய் இருக்கிறாய். உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டது.

''தேவதையே வணக்கம்! எனக்கு மனிதர்களைப் போல் கை கால் முளைக்க வேண்டும்.''

''உன் விருப்பம் போல் நடக்கட்டும்'' எனக் கூறி தேவதை மறைந்தது.

மறுநாள் காலையில் கை, கால் முளைத்த குறும்பையைக் கண்டு மற்ற குறும்பைகளும் காய்களும் ஆச்சரியப்பட்டன. தான் மரத்திலிருந்து இறங்கி மனிதர்களைப் போல் நடக்கப் போவதாகச் சொன்னது குறும்பை.

அப்போது தென்னை ''அது ஆபத்தான விஷயம்'' என்று அறிவுரை சொன்னது. கேட்டால்தானே! இறங்கி கை, கால்களை ஆட்டி ஆட்டி நடக்க ஆரம்பித்தது.

அப்போது அதை கவனித்த பூனை ஒன்று, ''என்னடா இது? சுண்டெலி



மாதிரி புதுசா ஒண்ணு கையை காலை ஆட்டிக்கிட்டுப் போகுது! ம்... சாப்பிட்டா ஜோரா இருக்குமே...'' என்றது.

குறும்பைக்கு நடுங்கிவிட்டது! நாலு கால் பாய்ச்சலில் பூனை துரத்தவும் அலறியடித்து ஓட ஆரம்பித்தது. எங்கே ஓடுவது என்று தெரியாமல் எப்படியாவது தப்பித்தால் போதும் என்று ஒரு வீட்டுக்குள் புகுந்து கொண்டது.

அது ஒரு வித்தைக்காரன் வீடு. குறும்பை ஒன்று கை காலுடன் உள்ளே நுழைந்ததும் அவனுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அதை 'லபக்' கென்று பிடித்து விட்டான்.

''ஆகா! இதை வைத்துக் கொண்டு வித்தை காட்டினால் எவ்வளவு காசு தேற்றலாம்'' என்று அதை ஒரு கூண்டில் பிடித்து அடைத்துக் கொண்டு நேரே கடைத் தெருவுக்குப் போனான்.

வித்தை காட்டும் இடத்தில் மக்களைக் கூட்டினான்.

''அய்யா பாருங்க... அம்மா பாருங்க... ஊர்லே உலகத்துலே எங்கேயும் காணாத அதிசயம். கை கால் முளைச்ச குறும்பை. இப்ப உங்களுக்காக என்னென்ன வித்தை காட்டப் போகுது பாருங்க.''



கூட்டம் கூடி ஆர்ப்பரித்தது.

''ஏய் குறும்பை! கூட்டத்துக்கு ஒரு கும்பிடு போடு!'' என்று கட்டளையிட்டான்.

குறும்பை மௌனமாக இருந்தது.

உடனே வித்தைக்காரன் சமாளித்தான்.

''மகா ஜனங்களே நீங்களெல்லாம் துட்டு போட்டால்தான் குறும்பை கும்பிடு போடுமாம்.''

எல்லோரும் காசை அள்ளிப் போட்டனர்.

''இப்போ கும்பிடு போடு குறும்பை.''

குறும்பை கும்பிடு போடாமல் பேசாமல் நிற்கவே, ஆத்திரமான வித்தைக்காரன் ஊசியால் ஒரு

வரம் வாங்கிய குறும்பை!

நக்கீரன்



குத்து குத்தினான். வலி தாங்க முடியாமல் கும்பிடு போட்டது குரும்பை. கூட்டம் கை தட்டியது.

''ஏய் குரும்பை, ஜோரா ஒரு டான்ஸ் ஆடு.''

குரும்பையை மீண்டும் ஊசியால் குத்த, அது ஆட ஆரம்பித்தது. அன்று முழுதும் பல்வேறு இடங்களில் அதை ஆடவிட்டு நல்ல காசு பார்த்தான்.

இரவு தன் வீட்டில் கூண்டில் அதை தொங்கவிட்டுவிட்டுச் சாப்பிடப் போனான். அழுகை அழுகையாக வந்தது குரும்பைக்கு. ஜன்னல் வழியே தெரிந்த வானத்தைப் பார்த்து அழுதது.

அப்போது தேவதை மீண்டும் வந்தது. தன் நிலையைச் சொல்லி அழுதது குரும்பை.

''சரி உன்னை மீண்டும் சாதாரண குரும்பையாக மாற்றுகிறேன்'' என்று கூறி மாற்றியது தேவதை.

வித்தைக்காரன் வந்து பார்த்தபோது வெறும் குரும்பை மட்டுமே கூண்டில் இருந்தது. ஆத்திரமடைந்த அவன், அதைக் கூண்டிலிருந்து வெளியே வீசி எறிந்தான்.

அதைத் தூக்கிக் கொண்ட தேவதை, தென்னை மரத்தில் மீண்டும் கொண்டு சேர்த்தது.

''தேவதையே ரொம்ப நன்றி! இனிமே நான் நானாகத்தான் இருக்கப் போகிறேன். இந்தப் பாடத்தை நான் கற்றுக் கொண்டு விட்டேன்'' என்றது குரும்பை.

அனைத்தும் சந்தோஷமடைந்தன.

☺

கோகுலம்

பட்டியல்

சிறுவர் சங்கம்!

வணக்கம் குழந்தைகளே!

கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு, நீங்கள் உற்சாகத்துடன் அனுப்பிக் கொண்டிருக்கும் கூப்பன்களை கவனத்துடன் சேகரித்து வருகிறோம். இந்த இதழின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டைகளில் முதல் ஐம்பது உறுப்பினர்களின் புகைப்படங்களும் அவர்களுக்கான உறுப்பினர் எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களைப் பற்றிய விவரப் பட்டியல் இதோ இங்கே. மற்ற உறுப்பினர்களின் பட்டியல் அடுத்தடுத்த இதழ்களில் வெளியாகும். அனைவருக்கும் நன்றி!

அன்புடன்
ஆசிரியர்

சிறுவர் சங்க கூப்பன் அடுத்த இதழில் வெளியாகும்.

1) நா.வருண், எட்டாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி

2) ஆர்.ஜி.காயத்ரி, பதினொராம் வகுப்பு, உலக மீட்பர் பள்ளி, திசையன்விளை

3) கு.நித்யாநந்தன், பத்தாம் வகுப்பு, பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி, கொடாப்பு கிராமம்

4) க.அஜந்தா ப்ரியதர்ஷினி, பதினொராம் வகுப்பு, மேக்ஸ்வெல் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

5) டி.எம்.சுரேந்தர், பத்தாம் வகுப்பு, வித்யாபார்த்தி மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்

6) மெ.இராமலெட்சுமி, பதினொராம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோவை - 1

7) கு.ஷ்யாம், ஆறாம் வகுப்பு, ஸ்ரீமாதா மெட்ரிகுலேஷன் பள்ளி, கும்பகோணம்

8) எஸ்.ஸ்வேதா, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீரேணுகா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெரியகுளம்

9) ச.மாரிமுத்து, பன்னிரண்டாம் வகுப்பு, நாடார் மேல்நிலைப்பள்ளி, இராசபாளையம்

10) நா.பிரபாகரன், பன்னிரண்டாம் வகுப்பு, மன்னர் மேல்நிலைப் பள்ளி, சிவகங்கை





11) ஆ.மைதிலி, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு

12) டி.கே.ஜி. கணபதி சுப்ரமணியன், ஆறாம் வகுப்பு, ஆக்ஸ்ஃபா விஸ்டம் வித்யாஷ்ரம், திருச்சி

13) வே.தீபிகா, ஆறாம் வகுப்பு, மஹரிஷி பப்ளிக் பள்ளி, மைசூர்

14) பி.ஆதர்ஷ், எட்டாம் வகுப்பு, பாலசரவணா மெட்ரிக் பள்ளி ஆதம்பாக்கம், சென்னை

15) ச.ஸ்வேதா, ஏழாம் வகுப்பு, புனித சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

16) மோ.அனீஸ்ராஜ், பதினொராம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, ஆனைமலை

17) ஆ.அனீஸ் ஃபாத்திமா, எட்டாம் வகுப்பு கெய்ன்ஸ் மெட்ரிக் பள்ளி, வள்ளியூர்

18) கோ.ப்ரவீண்குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்

19) கே.ஸ்ரீராம், ஏழாம் வகுப்பு, ஹோலி மதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, கீரப்பட்டி

20) ஆர்.பி.வளர்மதி, ஏழாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி, திசையன்விளை

21) மு.ராம்பிரசாந்த், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீவையாபுரி மேல்நிலைப் பள்ளி, சங்கரன்கோவில்

22) கே.பி.அகல்யா, ஆறாம் வகுப்பு, வேல்ஸ் வித்யாஷ்ரம், பல்லாவரம்

23) ர.போஜராஜன், ஆறாம் வகுப்பு, குருஞான சம்பந்தர் பள்ளி, மயிலாடுதுறை

24) எஸ்.டாலியாடிக்ஸி, நான்காம் வகுப்பு, விக்டரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெத்தேல்புரம்

25) க.சொக்கலிங்கம், ஏழாம் வகுப்பு, கு.ச.இ.மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர்

26) எஸ்.ரூபிகா, பத்தாம் வகுப்பு, த.ஆ.வே.பெல் பள்ளி, இராணிப்பேட்டை

27) ஆ.க.ஸ்ரீராமன், ஏழாம் வகுப்பு, டி.ஏ.வி.மெட்ரிக் மேல்நிலைபள்ளி, தி.நகர், சென்னை

28) கோ.ரம்யாஸ்ரீ, ஆறாம் வகுப்பு,ஸ்ரீவித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, ஊத்தங்கரை

29) எம்.ஜி.பரத், பத்தாம் வகுப்பு, பார்த்தி மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்

30) ச.சுவர்ணலட்சுமி, ஏழாம் வகுப்பு, பாரதி வித்யாபவன், ஈரோடு



பாப்பா

31) வே.தனசேகர், முதலாம் வகுப்பு, கலைமகள் வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி

32) க.பூர்ணஸ்ரீ, இரண்டாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அம்பத்தூர், சென்னை

33) சி.லோகேஷ், ஏழாம் வகுப்பு, சின்னச்சாமி அம்மாள் நகராட்சி உயர்நிலைப் பள்ளி, திருப்பூர்

34) அ.அனீஸ் ஃபாத்திமா, பத்தாம் வகுப்பு, எஸ்.ஏ.பி.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உத்தமபாளையம்

35) ப.இனியன், பதினொராம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளி, கிழக்கு தாம்பரம்

36) க.சேதுலெட்சுமி, ஏழாம் வகுப்பு, விவேகானந்தா கேந்திர வித்யாலயா, பூவியூர்

37) எஸ்.உதயமூர்த்தி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பனப்பாக்கம்

38) எஸ்.கே.இலக்கியா, இரண்டாம் வகுப்பு, பொன் வித்யாஷ்ரம் மேல்நிலைப் பள்ளி, சென்னை

39) கா.நத்தானியேல், நான்காம் வகுப்பு, செயின்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளி, செங்கல்பட்டு.

40) க.ஆர்த்தி, எட்டாம் வகுப்பு, சின்மயா வித்யாலயா, இராஜபாளையம்

41) மு.முகமது இக்பால், பத்தாம் வகுப்பு, செவன்த்டே அட்வென்டிஸ்ட் பள்ளி, திருச்சி

42) ர.ஸ்ரீநிதி, ஆறாம் வகுப்பு, த.ஆ.வே.பெல் பள்ளி, இராணிப்பேட்டை

43) ரா.நவீன் கிருஷிகேசன், மூன்றாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராஜபாளையம்

44) ஜி.ஆர்.ஸ்வாதி, நான்காம் வகுப்பு, செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி, சத்யமங்கலம்

45) ரா.அரசன் சோலைகுமார், ஐந்தாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராஜபாளையம்

46) கோ.காயத்ரி ஸ்மிருதா, எட்டாம் வகுப்பு, ஆல்ஃபா விஸ்டம் வித்யாஷ்ரம், திருச்சி

47) டி.ஆர்.ஸ்ரீராம், ஆறாம் வகுப்பு, டி.ஏ.வி. பெல் பள்ளி, இராணிப்பேட்டை

48) வெ.தீபிகா, பன்னிரண்டாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி, பெரம்பலூர்

49) செ.யோகேஷ்குமார், எட்டாம் வகுப்பு, ஸ்ரீரங்கா வித்யாலயா, இராயர்பாளையம்

50) க.அகல்யா, எட்டாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளி, திருச்சி



கட்டுரை

இந்த ஆண்டின் சுதந்திர தினத்துக்கு தனிச் சிறப்பு இருக்கிறது. இது நமக்கு அறுபதாவது சுதந்திர தினம்.



மின்னும் வைர

அதாவது நம் நாடு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுபட்டு அறுப தாண்டுகளாகின்றன. எனவே இது சுதந்திர வைரவிழா ஆண்டு!

இந்த சுதந்திரம் கடைக்குப் போய் லாலிபப் வாங்குவதுபோல் எளிதாகக் காசுக்கு வாங்கிய பொருள் அல்ல. இதைப் பெறுவதற்காக 250 ஆண்டுகளுக்கும் மேலாக எண்ணற்ற தலைவர்கள் போராடி யிருக்கிறார்கள்.

நீங்களெல்லாம் சுதந்திர இந்தியாவில் பிறக்கும் புண்ணியம் பெற்றவர்கள். எழுபது வயதுக்கும் அதிகமாக உள்ள பெரியவர்களிடம் கேட்டால் அடிமை இந்தியாவின் அவலநிலை எப்படி இருந்தது என்பதைச் சொல்வார்கள்.

ஏலம், மிளகு, கிராம்பு வாங்கி - விற்க கம்பெனி அமைத்து இங்கிலாந்து நாட்டி லிருந்து வந்தவர்கள்தான் கிழக்கிந்தியக் கம்பெனி (இங்கிலாந்து) வியாபாரிகள். அவர்கள் வந்த நேரம் நல்ல நேரமாக அவர்களுக்கு அமைந்தது. இந்த நாட்டை அப்பொழுது ஆண்டு வந்த சுதேசி மன்னர் கள் மக்கள் பிரச்னைகளை ஒதுக்கிவிட்டு பகையுணர்வோடு ஒருவரை ஒருவர் கவிழ்த்து, அழித்து மகிழ்வதில் தீவிரமாக இருந்தார்கள். நம்மவர்களின் ஒற்றுமை யின்மையைச் சாதகமாக்கிக் கொண்டு





சுதந்திரம்!

ரேவதி

சிறிது சிறிதாக ஆட்சியதிகாரத்தைக் கைப் பற்றினர். பணிய மறுத்தவர்களோடு சண்டையிட்டு ஆட்சியுரிமையைப் பறித்துக் கொண்டு உதவித் தொகை வழங்கி ஒதுக்கி வைத்தனர். மன்னர்களிடையே மட்டும் ஒற்றுமை இருந்திருப்பின் இந்த குள்ளநரித்தனத்திற்கெல்லாம் அன்றே முடிவுகட்டி இருக்கலாம்.

எவ்வளவோ நாடுகளில் சுதந்திரப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. ஆயிரக் கணக்கில் மக்கள் பலியாகி, வெற்றிபெற்று சுதந்திரம் கிடைத்ததும் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்களே நாட்டின் தலைவராகியிருக்கிறார்கள். தங்கள் தியாக முயற்சிக்குப் பரிசாக அதிகாரத்தையும் செல்வ வாழ்க்கையையும் அனுபவித்திருக்கிறார்கள்.

ஆனால் நம்நாட்டில் காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டம் முற்றிலும் மாறுபட்டது. அதுவரை இந்தப் போராட்டங்கள் எல்லாமே மன்னர்களுக்கும் ஆங்கிலேய அரசுக்கும் இடையே நடைபெற்றவையாக இருந்தன. காந்தியடிகள் தலைமையேற்ற பின் இது மக்கள் போராட்டமாக மாறி, ஆங்கில அரசைத் திக்குமுக்காட வைத்தது. அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியவர்கள் எந்தவிதமான ஆயுதத்தையும் தங்களோடு கொண்டு செல்லவில்லை. மக்கள் விரோத சட்டங்களை எதிர்த்துக் குரல் கொடுத்துத் தாங்களே கைதாகி மகிழ்ச்சியாகச் சிறை சென்றனர். உலகம் அன்று



வரை கண்டிராத அதிசயமான போராட்டமாக இருந்தது. அதற்குப் பெயர்தான் சத்யாக் கிரஹம் (அறப் போராட்டம்).

எத்தனையோ போராட்டங்கள் வாயிலாக காந்தியடிகளின் தொண்டர்கள் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை உருவாக்கினர்.

ஆங்கில அரசு ஏதாவது செய்தாக வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டு, காந்தியடிகளை அழைத்துப்பேசி, தீர்வு காண முயன்றது. இதன் விளைவே நம் நாட்டுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம். சுதந்திர இந்தியாவில் காந்தியடிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவில்லை. மக்கள் தொண்டராகவே உயிர் துறந்தார்.


இன்றைய உலகின் தலையாய பிரச்னை வன்முறையே என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். வன்முறையால் பெறப்படும் தீர்வு நிரந்தரமானது அல்ல. மனதார உணர்ந்து ஏற்கப்படும் முடிவுகளே நிரந்தமானவை என்பதை சத்யாகிரஹத்தின் வாயிலாக உலகுக்கு உணர்த்தி, இந்தியா சுதந்திர பெற வழி காட்டிய அண்ணல் காந்தியடிகளின் வழியை பின்பற்ற வேண்டும். நாட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைக்க நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும்.

நாம் பெற்றுள்ள சுதந்திரம் விலை மதிப்பில்லாதது. அதோடு, அகிம்சை உலகுக்கே வழிகாட்ட வல்லது என் பெரு மிதத்தோடு இதைக் கட்டி காக்க ஒற்றுமை உணர்வோடு செயல் படுவோம்!

ஜெய் ஹிந்த்!



சத்திரமும் நட்சத்திரமும்!



"விண்வெளி ஆராய்ச்சிக்குப் போனா அங்கே எந்த இடத்துல தங்குவாங்க?"


"நட்சத்திரத்துல..."

"எப்படி?"

"அங்கதானே 'சத்திரம்' இருக்கு."

– **சரவணன்,**
திருவண்ணாமலை


கடவுள் வந்தார்!
கதை: பி.எஸ்.ஜேம்ஸ், படம்: ராம்கி
வனஜாவுக்குக் கடவுள் பக்தி அதிகம். நாள் தவறாமல் கோயிலுக்குச் செல்வாள்.
கடவுளே, எப்பவும் சந்தோஷமா இருக்க அருள்புரி.
ஒரு நாள் தூக்கத்தில்...
வனஜா, நாளை நான் உன் வீட்டுக்கு வருகிறேன்.
இதென்ன வெறும் கனவா? எதற்கும் நாளை வீட்டைச் சுத்தம் செய்து வைப்போம்.
மறுநாள் வீட்டைச் சுத்தம் செய்து, வாசலில் கோலமிட்டாள். அப்போது...
அம்மா மகராசியே, பசிக்குது! சாப்பிட ஏதாவது கொடுங்கம்மா.
சீ! காலையிலேயே பிச்சையா? போ, அப்பாடி!



... கடவுளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில் இவள் வந்து எரிச்சலைக் கிளப்புகிறாள்.
படார்
சற்று நேரத்தில் வீட்டுக் கூரைமீது ஏதோ சத்தம் கேட்டது.
என்ன அது? கடவுள்தான் கூரை வழியாக இறங்குகிறாரோ?
வனஜா வெளியே வந்து பார்க்க, அடிபட்ட காகம் ஒன்று காலடியில் விழுந்தது.
சீ சீ கோலம் போட்ட வாசலை அலங்கோலம் செய் துட்டதே! குப்பையிலப் போடுவோம்.
பக்கத்து வீட்டு வாணி பார்த்தாள்...
வனஜா என்ன செய்யறே?
பாவம்! இதுவும் ஒரு ஜீவன்தான். உயிருக்குப் போராடுது. காப்பாத்துவோம்.
நீ வேணும்னா செய். நான் வேற ஒருத்தரை எதிர் பார்த்துட்டிருக்கேன்.


பொழுது சாய்ந்து இரவானது.
சே, கடவுள் வரவே இல்லையே! இப்படி ஏமாத்திட்டாரே!
மீண்டும் தூக்கத்தில் கடவுள் தோன்றினார்.
கடவுளே, வருவதாகச் சொல்லிவிட்டு ஏன் வரவில்லை.
நான் இரண்டுமுறை வந்தேன் வனஜா. முதல் முறை பிச்சைக்காரியா வந்தேன்.
...நீ சாப்பாடு தரவில்லை. பக்கத்து வீட்டு வாணி தந்தாள். அதேபோல் காகம் வடிவிலும் வந்தேன்.
இரண்டு முறையும் என்னை நீ உதாசீனம் செய்துவிட்டாய். அதனால் வாணிக்கு அருள் புரிந்துவிட்டேன்.
கடவுளே, என்னை மன்னியுங்கள்




ஆகஸ்ட் மாதத்தில் முக்கியமாகக் கொண்டாடப்படுவது இந்திய நாட்டின் சுதந்திர தினம். இதே நாளில் நாட்டின் தேசிய நாளை கொண்டாடும் நாடு தென்கொரியா. நமக்கு ஒரு நாள் முன்னதாக சுதந்திர தினம் கொண்டாடும் நாடு பாகிஸ்தான்.

நண்பர்கள் தினம் : உலகம் முழுவதிலும் எந்த நாட்டு புராணங்கள், வரலாற்று, இலக்கியங்களை எடுத்துக் கொண்டாலும், அதில் நட்புக்கு இலக்கணமான பாத்திரங்களைக் காண முடியும். நம் புராணத்தில் கிருஷ்ணர் - குசேலர், ராமன்-குகன் என்று ஆரம்பித்து பல உதாரணங்களை கூறமுடியும். ஆனால், நண்பர்கள் தினம் கொண்டாடுவதற்கு பிள்ளையார் சுழி போட்டது அமெரிக்கா தான். 1935ஆம் ஆண்டு, அமெரிக்க அரசாங்கம் ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையை 'நண்பர்கள் தினமாக' அறிவித்தது. நட்பு என்ற அற்புதமான, ஆழமான உறவுக்கு மரியாதை செய்வதே இதன் நோக்கம். அமெரிக்காவில் நண்பர்கள் தினம் மிகப் பிரபலமானதை அடுத்து உலகம் முழுவதும் நண்பர்கள் தினம் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

ஹீரோஷிமா தினம் : ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் ஆறாம் தேதியை ஜப்பானும் மற்றும் பல உலக நாடுகளும் 'ஹீரோஷிமா தினமாக' கடைபிடித்து வருகிறார்கள். காரணம் இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில் 1945ஆம் ஆண்டு, ஆகஸ்ட் ஆறாம் தேதி அமெரிக்கா, ஜப்பான் நாட்டில் ஹீரோஷிமா நகரத்தின்மீது உலகிலேயே முதல் முறையாக விட்டில் பாய் என்ற அணுகுண்டை வீசியது. அதனால் ஏற்பட்ட கதிர் வீச்சுக் காரணமாகவும், அபரிமிதமான வெப்பம் காரணமாகவும் சுமார் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் அப்பாவி மக்களை விட்டில் பாய் அணுகுண்டு பலி வாங்கியது. குண்டு வெடிப்பால் பச்சை மரங்கள் கூட தீப்பற்றி எரிந்தன. அப்போது ஏற்பட்ட கதிர்வீச்சு, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும்கூட உடல் குறைபாடுகளை ஏற்படுத்தியது.

இந்தக் கொடுமையான நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து, உலக சமாதானத்தையும், அணு ஆயுதத்துக்கு எதிரான உலகளாவிய விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த 'ஹீரோஷிமா தினம்' அனுசரிக்கப்படுகிறது.







நண்பர்கள் தினம்!

அன்றைய தினம் ஜப்பானில் ஹீரோஷிமா நகரில் அணு குண்டு வெடித்த பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள நினைவுச் சின்னம் அருகே ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள். ஆலய மணிகள் ஒலிக்க, வானில் சமாதானப் புறாக்களைப் பறக்க விடுவர். அந்த நேரத்தில் போக்குவரத்து சில நிமிடங்கள் நிறுத்தி வைக்கப்படுகிறது.

ஹீரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட அதிர்ச்சியிலிருந்து உலகம் மீளுவதற்கு முன்பே, மூன்று நாட்கள் கழித்து, ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி அமெரிக்கா, ஜப்பான் நாட்டின் முக்கிய துறைமுக நகரமான நாகசாகி மீது இரண்டாவது அணுகுண்டு வீசியது. அந்த குண்டு சுமார் நாற்பதாயிரம் மக்களை பலி கொண்டது. (ஹீரோஷிமாவில் வீசப்பட்டது யூரேனியம் கொண்டு தயாரிக்கப்பட்ட அணுகுண்டு; நாகசாகியில் வீசப்பட்டது புளுட்டோனியம் அணுகுண்டு என்பது பலரும் அறியாத தகவல்) எனவே, ஆண்டுதோறும் ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி 'நாகசாகி தினம்' அனுசரிக்கப்படுகிறது.

மூத்த குடிமக்கள் தினம்


1950ஆம் ஆண்டில், உலகில் சுமார் இருபது கோடி முதியவர்கள் இருந்தார்கள். 2020ஆம் ஆண்டில், இது அறுபது கோடியாக உயரும் என்று தெரிகிறது. உலகில் பெருகி வரும் முதியவர்களை, போதிய அக்கறையுடன் கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் விதமாக ரோனால்டு ரீகன் அமெரிக்க அதிபராக இருந்தபோது ஆகஸ்ட் 21ஆம் தேதியை தேசிய மூத்த குடிமக்கள் தினமாக அறிவித்தார். ''அன்றைய தினம் இளைய தலைமுறையினர் முதியவர்களுடன் நேரத்தைச் செலவிட வேண்டும். அவர்கள் ஆற்றிய பணியை அங்கீகரித்து, நன்றி தெரிவிக்க வேண்டும். முதியோர் இல்லங்களுக்குச் சென்று சேவை செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

ஆகஸ்ட் 9 - வெள்ளையனே வெளியேறு போராட்ட தினம்

ஆகஸ்ட் - 19 புகைப்பட தினம்

எஸ்.சந்திரமௌலி





தாஜ்மஹால்


சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த 'நியூ 7 வொண்டர்ஸ்' நிறுவனம் இணைய தளம் மூலம் உலக மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தி, புதிய ஏழு உலக அதிசயங்களை ஜூலை மாதம் ஏழாம் தேதி (07.07.07) வெளியிட்டது. இதில் இந்தியாவின் தாஜ்மஹால், சீனாவின் பெருஞ்சுவர் மட்டுமே ஏற்கெனவே இருந்த அதிசயங்கள். மற்றவை இடம் பெறவில்லை. இன்னொரு விஷயம் யுனேஸ்கோ அமைப்பு இந்தப் புதிய அதிசயப் பட்டியலை ஏற்கவில்லை. புதிய அதிசயங்கள் நல்லா இருக்கா?

அதிசயங்களே புதிய



சிச்சன் இசா பிரமிடு [மெக்சிகோ]

மேசுபிக்சு கோட்டை [பெரு]





ஏசு சிலை [பிரேசில்]




பெட்ரா மலை சிற்பம் [ஜோர்டான்]

அதிசயங்களே!



ரோம் அரங்கம் [இத்தாலி]



சீன பெருஞ்சுவர்

கடந்த மாதம் கேட்கப்பட்ட கேள்விகளும் உங்கள் பதில்களும் :

1. சதுப்பு நிலங்கள் என்றால் என்ன? தமிழகத்தில் இவை எங்குள்ளன?

ஆற்றுக் கழிமுகங்களில் உள்ள வண்டல் மண்ணில் கடல் நீர் புகுவதால் ஏற்படும் நிலப்பகுதியே சதுப்பு நிலங்கள் எனப்படும். தமிழகத்தில் சிதம்பரம் அருகிலுள்ள பிச்சாவரம் பகுதியில் சதுப்பு நிலங்கள் உள்ளன. தவிர, உப்பளங்களின் அருகேயும் ஆங்காங்கே சதுப்பு நிலம் இருக்கும்.

- ச.சாதிக் பாட்ஷா,
திருவாரூர்

2. 'சுதந்திர தினம்' என்ற தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை எழுதுங்கள்.

அகிம்சையின் வலிமையை
அகிலம் உணர்ந்த தினம்
ஆங்கிலேயரின் ஆட்சியை
அன்பு வென்ற தினம்
தியாகச் சுடர்களை
நினைவில் வணங்கும் தினம்
சுதந்திரக் காற்றை
சுவாசிக்கும் இனிய தினம்!

- ஜி.சாயிலட்சுமி,
கிருஷ்ணாபுரம்

ஆசையாய் வளர்த்த
கிளியைப் பறக்க விட்டேன்
அடைத்து வைத்த
மீன்களை ஆற்றில் விட்டேன்
செல்ல நாயின்
சங்கிலியைக் கழற்றி விட்டேன்
சுதந்திர தினத்தை
செயலால் கொண்டாடி விட்டேன்!

- எம்.எஸ்.சொஹைல் அஹ்மத்,
கீழக்கரை



3. உங்களுக்குக் கால இயந்திரத்தில் செல்லும் வாய்ப்பு கிடைத்தால் யாரைச் சென்று சந்திப்பீர்கள்? ஏன்?

எனக்குக் கால இயந்திரத்தில் செல்லும் வாய்ப்பு கிடைத்தால் 'நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்' அவர்களைச் சந்திப்பேன். காரணம் அவரது இறுதிக் காலகட்டம் பற்றி மர்மமாகவே உள்ளது. பல்வேறு சர்ச்சைகளும் எழுகின்றன. அதையெல்லாம் அவரிடமே கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டு, திரும்பி வந்து, புத்தகம் எழுதி உண்மையை உலகுக்கு உணர்த்துவேன்.

- ஜீ.வி.நிர்மலாதேவி,
திருவண்ணாமலை

நான் டைனோஸர்கள் வாழ்ந்த காலத்துக்குச் செல்வேன். அவற்றைச் சந்தித்து, அவற்றின் பழக்க வழக்கங்கள், வாழும்





கொடுக்க வாத்தியார் கிடையாது.

- என்.கிருபாகரன், எரகுடி

மொட்டைத் தலை மனிதரும், இன்னொருவரும்...

''சார், ராமசாமி வீடு எங்கே இருக்கு?''

''இப்படி மொட்டையா கேட்டா எப்படிங்க?''

''அதுக்காக முடி வளர்ற வரைக்குமா இங்கேயே நின்னுட்டு இருக்க முடியும்?''

- இரா.கிஷோர், புதுக்கோட்டை

டைனோஸரைச் சந்திப்பேன்!

முறைகளை, பக்கத்திலேயே இருந்து படம் பிடித்துக் கொண்டு வர விரும்புகிறேன்.

- ஷாஜியா அஹ்மத் அமீர், இராமநாதபுரம்

4. நீங்கள் படித்து ரசித்த ஒரு நகைச்சுவையைச் சொல்லுங்கள்

வந்தவர் : அந்த புத்தகத்தின் விலை என்ன?

கடைக்காரர் : ஐநூறு ரூபாய் சார்

வந்தவர் : சொல்லிக் கொடுங்களேன்.

கடைக்காரர் : ஸாரி சார், நாங்க விற்பனைதான் செய்வோம், சொல்லிக் கொடுக்க வாத்தியார் கிடையாது.

5. மணிப்பூர் மாநிலத்தின் தலைநகர் எது?

இம்பால்


(சரியான விடையெழுதியவர்களில் குலுக்கலில் பரிசு பெறுகிறார்கள்)

1. க.சிந்துஜா, சென்னை
2. வை.சுப்ரமணியன், பெத்தநாயக் கன்பாளையம்

இத்துடன் 'அன்புடன் ஜக்கு' பகுதி நிறைவு பெறுகிறது. அடுத்த மாதம் முதல் வேறொரு புதிய பகுதி தொடங்குகிறது. ☺

தேன்மொழி – கனிமொழி

கருத்து, படம்;பிள்ளை



கோகுலம் சிறுவர் சங்கம்


உறுப்பினர்கள்


26

27

28

29

30

31

32

33

34

35


36

37

38

39

40

41

42

43

44

45

46

47

48

49

50


பெயர் மற்றும் விவரங்கள் 65-ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24260/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka

